# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி: 23411 விலை சதம் 25

வள்ளுவர் ஆண்டு 2004, ஆடி 28உ (12—8—73) ஞாயிறு றஜப் ஆகிர் 12—புத்தகம் 26 இதழ் 35


கல்லோயாவில்

# சிங்கள ஆக்கிரமிப்பு!

## தமிழர் முஸ்லிம்கள் விரட்டப்படுகின்றனர்!

## வீடுகளுக்குத் தீ வைப்பு?

### பேரவையில் முஸ்தபா கண்டனம்!

'கல்லோயாத் திட்டம் ஆரம்பமாவதற்கு முன்பிருந்தே அப்பகுதியில் குடியேறி தலைமுறையாக விவசாயம் செய்து வரும் தமிழர்களையும் முஸ்லிம்களையும் அங்கிருந்து பலாத்காரமாக சிங்களவர்கள் வெளியேற்றிவருகின்றனர். இந்த அநீதிக்கு உடனடியாக முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டும்.'

—இவ்வாறு 7—8—73ல் தேசிய அரசுப் பேரவையில் ஒத்திவைப்புப் பிரேரணை மீது பேசிய நிந்தவூர் பா.உ. ஜனாப் எம். எம். முஸ்தபா குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறியதாவது:-

'கல்லோயாத் திட்டம் ஆரம்பமாவதற்கு முன்பே இப்பகுதியில் முஸ்லிம்களும் தமிழர்களும் முடிக்குரிய காணிகளில் குடியேறிபெரும் பணம் செலவிட்டு அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டார்கள். சிங்களவர்களும், தமிழர்களும் ஒற்றுமையாக இப்பிரதேசத்தில் விவசாயம் செய்து வந்தனர்.

இப்போது அந்த இடங்களில் சிங்களவர்கள் ஆக்கிரமிப்பு நடத்தி வருகிறார்கள். மற்ற இடங்களைச் சேர்ந்த சிங்கள மக்கள் இப்பகுதிகளுக்குச் சென்று பலாத்காரமாக முஸ்லிம்களையும் தமிழர்களையும் வெளியேற்றி வருகிறார்கள்.

'இப்பகுதிகளில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்குத் தீ வைக்கிறார்கள் என்றும் எனக்குத் தகவல் கிடைத்துள்ளது. இப்பகுதிகளில் சிங்கள மக்கள் நடத்திவரும் ஆக்கிரமிப்பு, பலாத்கார நடவடிக்கைகள் பற்றி தினமும் புகார்கள் வந்து கொண்டே இருக்கின்றன.

'இந்தப் பிரச்சினையை இனத்துவேஷத்தின் காரண

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழரசுமாநாடு

## குமரகுரு தலைமையில் வரவேற்புக் குழு

காங்கேசன்துறையில் செப்டம்பர் திங்களில் நடைபெறவுள்ள இலங்கைத்தமிழரசுக் கட்சியின் 12-வது மாநில மாநாட்டின் வரவேற்புக் குழுத்தலைவராக வழக்கறிஞர் அ. குமரகுரு தெரிவு செய்யப்பட்டுள்ளார். மாநாட்டுச் செயலாளராக க. நடராசாவும், இணைச் செயலாளர்களாக சி. புஷ்பராசா, ம. குணாளன் ஆகியோரும் இணைப்பொருளாளர்களாக வ. சரவணமுத்து கு. பொன்னம்பலம் ஆகியோரும் பணியாற்றுகின்றனர்.

இதோ ஒரு நகைச்சுவை

### நம்பினால் நம்புங்கள் துரையப்பா ஒரு தமிழராம்!

''தமிழை எவரும் அழித்துவிடமுடியாது. நாம் எல்லோரும் தமிழர்தான்!''

—அல்பிறட் துரையப்பா.
(வீரகேசரி 7.8.73)

லேக்ஹவுஸ்

## பணிப்பாளர் குழுவிலும் தமிழனுக்குச் செருப்படி!

லேக் ஹவுஸ் பத்திரிகை நிறுவனத்தை நடத்துதற்குப் புதிதாக அரசாங்கம் நிறுவிய பணிப்பாளர் குழுவிலே ஒரு தமிழர் கூட நியமனம் பெறவில்லை.

ஒரு தமிழ் நாளேட்டை நடத்தும் இந்த நிறுவனத்துக்கு ஒரு தமிழனைப் பணிப்பாளராக நியமிக்காமல் அரசாங்கம் தமிழினத்தையே புறக்கணித்துளது. இவ்வாறு இன ஒதுக்கல் செய்வது தானே அரசாங்கத்தின் பௌத்த சிங்கள ஏகாதிபத்தியக் கொள்கை — இல்லை புதிய சிறிலங்கா சமதர்மக் கொள்கை என்று கேட்கின்றனர் பொது மக்கள்.

தமிழர்கள் புறக்கணிக்கப்பட்ட குழுக்களின் அட்டவணை இதோ:-

(1) பகிரங்க சேவை ஆணைக்குழு.

(2) இ. போ. ச. பணிப்பாளர் சபை.

(3) இலங்கை வானொலிக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபை.

(4) அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனசபை.

(5) உள்ளூர் ஆட்சிச் சேவைக் குழு.

இப்பொழுது லேக்ஹவுஸ் நிறுவனப் பணிப்பாளர் குழுவிலும் தமிழர் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்.

### கூட்டுறவுக்கடை பூட்டப்பட்டது யார் உத்தரவில்

இரத்தினம் கேள்வி?

அமைச்சர் இலங்கரத்தின 24-7-73ல் யாழ்ப்பாணம் வந்தபோது பல நோக்குக் கூட்டுறவுக்கடைகள் பூட்டப்பட்டு மக்கள் வயிற்றில் அடிக்கப்பட்டார்கள் அல்லவா? இது பற்றி தேசிய பேரவையில் பண்டிதர் இரத்தினம் கேள்வியெழுப்பவுள்ளார்:

அரைநாளும், முழுநாளுமாக, அன்று பூட்டப்பட்ட ப. நோ. கூ. சங்கங்கள் எவை எவையென்பதையும், இவ்வாறு பூட்டும்படி அவற்றுக்கு பணித்தவர் யார் என்பதையும் அப்படிப்பணிப்பதற்கு அவருக்கு அதிகாரம் உண்டா என்றும் பண்டிதர் இலங்கரத்தினவிடம் கேட்கவிருக்கிறார்!

லேக்ஹவுஸ் பகிஷ்கரிப்பு பிரச்சினையில்

## தமிழர் கூட்டணிக்கு எதிராக அரசு நடத்திய வெறிப்பிரசாரம்!

ஆகஸ்ட் 1, 2, 3 ஆகிய தேதிகளில் லேக் ஹவுஸ் பத்திரிகைகளை பகிஷ்கரிக்கும்படி யூ. என் பி. ஒரு பிரச்சார இயக்கத்தை நடத்தியதல்லவா? இந்த பகிஷ்கார இயக்கத்தில் தமிழர் கூட்டணி சேருவதாக முடிவு செய்யவுமில்லை — சேரவுமில்லையென்பதை தமிழர் கூட்டணியின் செயலாளர் நாயகம் திரு. அ. அமிர்தலிங்கம் பகிரங்க அறிக்கை மூலம் தெளிவாக்கியிருந்தார்.

ஆனால், அரசாங்கம் பகிஷ்கரிப்புக்கு எதிராக வெளியிட்டிருந்த துண்டுப்பிரசுரமொன்றில், 'நாட்டை இரண்டாக துண்டாடுமாறு கோரி இடையறாது கூச்சலிடும் வட இலங்கை இனவெறியாளர்களும்' லேக் ஹவுஸ் பகிஷ்கரிப்பு இயக்கத்தில் சேர்ந்திருப்பதாக பொய்யும் இனவெறியும் கலந்த பிரச்சாரத்தை நடத்தியிருக்கிறது.

அரசாங்கம், சிங்களம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் இத்துண்டுப் பிரசுரத்தை வெளியிட்டுள்ளது. இப்பிரசுரத்தில் தமிழர் கூட்டணியைத்தான், 'நாட்டை இரண்டாக துண்டாடுமாறு கோரி இடையறாது கூச்சலிடும் வட இலங்கை இன வெறியாளர்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்பது யாருக்கும் தெற்றென விளங்கும்.

(4-ம் பக்கம் பார்க்க)

## தமிழ் ஒதுக்கல்!

● 9—7—73ல் பாதுகாப்பு அமைச்சு வெளியிட்ட 67/4ஆம் இலக்கமுடைய அரசாங்க விசேட வர்த்தமானி சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது — தமிழில் இல்லை.

● அரச வழங்கல் பகுதி, அரச விமானப் படை என்பன அரசாங்க வர்த்தமானியில் வெளியிடும் விளம்பரங்கள் ஆங்கிலத்திலும், சிங்களத்திலும் மட்டுமே வெளியிடப்படுகின்றன — தமிழில் வெளியிடப்படுவதில்லை.

● கமத்தொழில் காணி அமைச்சு இவ்வாண்டு வெளியிட்ட செயல்படுத்தும் திட்டம் சிங்களத்திலும், ஆங்கிலத்திலும் மட்டுமே உண்டு—தமிழில் இல்லை!

● சந்தைப்படுத்தும் அபிவிருத்தி ஆணையாளர் 1973ல் வெளியிட்ட 69-70ம் ஆண்டு நிர்வாக அறிக்கை தமிழில் இல்லை!

(7-ம் பக்கம் பார்க்க)

## கம்யூனிஸ்ட் என்று கருதப்படுபவர் இந்து நாகரிக பிரிவிற்குத் தலைவரா?

### கைலாசபதி நியமனம் குறித்து இந்துமன்றங்களின் மௌனம் கலையுமா?

இலங்கைப் பல்கலைக்கழக வித்தியாலங்கார வளாகத்தின் இந்துநாகரிகப் பிரிவிற்குத் தலைவராகக் கலாநிதி கைலாசபதி என்பவரைக் கல்வி அமைச்சு திடீரென நியமித்துள்ளது.

பௌத்தத்துக்கு அரசியலமைப்பிலேயே அதிமுக்கிய இடம்அளித்த சிங்கள அரசு, இந்து சமயத்திற்கு அத்தகைய இடம் அளிக்காத அதே வேளையில் இந்து சமயத்தில் பௌத்தத்தைத் திணிக்கவும் நடவடிக்கை எடுக்க முயன்றது.

இந்து மாணவர்களுக்கு பௌத்த மத பாடத்தைத் திணிப்பதற்கு சில மாதங்களுக்குமுன் ஆலோசனையில் இறங்கிய அரசு, தற்போது சமயத்தையே அழிக்கக் கருதும் ஏஜண்டுகளினூடாக இந்து சமய ஒழிப்பு நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளதா என்று கேட்கின்றனர் இந்துக்கள்.

இன்னொரு படியாகவே சீனச்சார்புக் கம்யூனிஸ்ட் என்று கருதப்படும் கலாநிதி கே. கைலாசபதி இந்து நாகரிகப் பிரிவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளாரா என்று கேட்கப்படுகிறது. கம்யூனிஸ்ட் சித்தாந்தப்படி, மதம் மக்களுக்கு அபின் போன்றது என்பது தெரிந்ததே.

கொழும்பு வளாகத்தில் பேராசிரியர் சதாசிவத்தின் கீழ் தமிழ் விரிவுரையாளராகக் கடமையாற்றியவர் திரு. கைலாசபதி. இவரது திடீர் நியமனம் பற்றிப் பேராசிரியர் சதாசிவமும் அறியவில்லையாம்.

கொழும்பு வளாகத்திலும் பேராதனை வளாகத்திலும் கலாநிதி கைலாசபதியிலும் பார்க்க இந்து நாகரிகத்தில் துறைபோகிய சிரேட்ட விரிவுரையாளர்கள் பலர் இருந்தபோதும் அவர்களது சேவைக் காலத்தையும் கவ

(4-ம் பக்கம் பார்க்க)

**காங்கேசன்துறையில் செப்டம்பர் 7, 8, 9-ல் தமிழரசு மாநாடு**
**கன்னித் தமிழ்க் காளையே! மாநாடு காண, எழுச்சிபெற விரைந்து வா!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலை வீரன் ஜோசி ரிசால்

பிலிப்பைன் ஸ்பெயின் என்னும் நாட்டிற்கு அடங்கியிருந்தது. ஸ்பானியர் பிலிப்பைன் வாசிகளை அடக்கியாண்டனர். இந்த ஏகாதிபத்தியத்தை ஒழிக்கப் பல புரட்சிகள் நடைபெற விருந்தன. ஆனால் ஆட்சியாளர் அடக்கிவிட்டனர்.

1861 ஆண்டு யூன் மாதம் 19திகதி ஜோசிரிசால் பிறந்தான். ஆட்சியாளரின் கொடுமையைக் கண்டு மனம் வருந்தினான். நாட்டுப்பற்றுள்ள ஒரு பெரியவரிடம் ஆட்சியாளரின் கொடுமையைப் பற்றி ஒருநாள் பேசிக்கொண்டிருந்தான். பெரியவர் ரிசாலை நோக்கி 'குழந்தாய் உன் மனதில் குடிகொண்டிருக்கும் எண்ணம் சாதாரணமானதல்ல; இதை நீ தைரியத்துடன் செய்து முடிக்கவேண்டும். மகனே உன் மனக்கோட்டைநிறைவு பெறட்டும் என்று ஆசி கூறி அனுப்பினார்.

சில தினங்கள் கழிந்தன. ரிசால் உலாவிவரப் புறப்பட்டான். மணிலா நகரத்தின் நடுவே, மக்கள் திரண்டு நின்றனர். அந்தத் திரளைத் துளைத்துநுழைந்தான் ரிசால். ஒரு கிழவர் தூக்கு மரத்தின் பக்கத்தில் நின்று திரண்டிருந்த மக்களுக்கு வீரவணக்கம் செலுத்திக் கொண்டிருந்தார். உற்று நோக்கினான் ரிசால், ஆம் அன்று அவனுக்கு ஆசி கூறி அனுப்பிய பெரியவா தான்! அவர்முகம் கறுப்புத் துணியால் மூடப்பட்டது. மறுகணமே பிணமென்னும் பெயருடன் தொங்கினார்.

ரிசால் அலறினன். அவனால் அந்தக்காட்சியை மறக்கவே முடியவில்லை. இப்படி நாள்தோறும் ஒருவரை நடுத்தெருவில் தொங்கவிடுவதன் மூலம் கிளர்ச்சியை அடக்கிவிடலாம் என்று கருதினர் ஆட்சியாளர்.

''இந்த அநீதியை, அட்டூழியத்தை, சர்வாதிகாரத்தை, கொடுமையை, ஏகாதிபத்தியத்தை நான் ஏன் எதிர்த்துப் போராட முடியாது?......நீ சிறுவன் என்னை யாரும் அறியார்? ...... அதற்காக நான் சும்மா இருக்க வேண்டுமா? ...இல்லை. நீ ஒரு அறிஞனாக விளங்கு. உன் கொள்கையை நாடு பூராகவும் பரப்பு உலகம் உன்னை அறியும். பின் புரட்சியைத் துவங்கு—வெற்றி பெறுவாய் இது உறுதி'' என்று தன் மனதுக்குள்ளே போராடி முடிவு கட்டிக் கொண்டான்.

பின்னர் மணிலா கல்லூரியில்கற்றுத்தேர்ந்தான்அதன் பின் இஞ்சினியரிங் படித்து முதன்மையாகத் தேறினன். பாரிஸிக்குச் சென்று வைத்தியம்படித்தான். ஜெர்மனிக்குச் சென்று இயந்திரக்கலையும், இரசாயனமும் பயின்றான் — இப்படி அவன் ஒரு பல்கலை அறிஞனுனன்.

பாரிஸில் கண்வைத்தியம் பயின்ற போது 'பிலிப்பைன்' என்னும் நூலை எழுதினன். இந்நூலைப் பிலிப்பைன் வாசிகள் படிக்கக் கூடாதென்றும், படிப்பதைக் கண்டால் கடும் தண்டனை விதிக்கப்படும் என்றும் விளம்பரம் செய்தது ஸ்பானிய அரசாங்கம்.

ஆனாலும் ரிசாலின் அரும் பெரும் முயற்சியால் பிலிப்பைன் வாசிகளிடம் அந்நூல் பரவிவிட்டது. இந்நூலைப் படித்து விழிப்படைந்தனர். கோழைத்தனம் ஓடி மறைந்தது, வீரவுணர்ச்சி எழுந்தது, சுதந்திரவுணர்வு பெற்றனர். உரிமைப் போராட்டம் துவங்கும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். நாட்டுநலன் விரும்பும் தொண்டர்களைத் திரட்டி இரகசியமாக ஒரு சங்கமும் நிறுவினன்.

எப்படியோ செய்தியறிந்த ஆட்சிபீடம் ரிசாலை நாடு கடத்திவிட்டது. ரிசால் ஆங்கில நாட்டிற்குச் சென்று தன் நாட்டின் நிலைமையை விளக்கினன். தன்கருத்தை பத்திரிகைகளில் வெளியிட்டான். ரிசால் அயல் நாட்டிலிருந்து செய்யும் செயல்களையறிந்த ஸ்பானிய அரசாங்கம், ரிசாலின் மீது கொண்ட ஆத்திரத்தால், ரிசாலின் உறவினர்களையும், நண்பர்களையும் பிடித்துக் காரணமின்றிச் சிறையிலிட்டது.

இச்செய்தியறிந்த ரிசால், ''ஆணவத்தின் பீடத்தில் அமர்ந்து ஆட்சிபுரியும் கொடுமைக்காரர்களே! என் மீதிருக்கும் ஆத்திரத்தைஎன் உறவினர்கள் மீது காட்ட வேண்டாம் — நானே வருகிறேன்'' என்று கூறி மணிலா வந்தடைந்தான் அந்த அஞ்சாநெஞ்சினன்.

உடனே ரிசாலைக் கைது செய்து டாபிடா என்னும் இடத்தில் சிறை வைத்தனர். அந்த ஊர் எல்லையை விட்டு வெளியே போகக்கூடாது என்று உத்தரவும் இட்டனர்.

ரிசால் அங்கே ஒரு வைத்திய சாலையை நிறுவிக் கண் வைத்தியம் செய்தான். ஒரு நாள் அவ்வைத்தியசாலைக்கு ஒரு ஐரிஷ் பெண் வந்தாள். எழில் மிக்க அவளை ரிசால் காதலித்தான். அவளும் அவனை மணக்க விரும்பினாள். பின் இருவரும் திருமணம் செய்து கொண்டனர்.

திடீரென ஒருநாள்புரட்சிக் கொடி உயர்த்தப்பட்டது. ரிசாலும், மனைவியும் டாபிடாவிலிருந்து மணிலா வந்தடைந்தனர். புரட்சிப்புகையால் மூடப்பட்ட ஆட்சியாளர் மக்களை மாட்டை அடிப்பதுபோல் அடித்தனர். கண்ணெதிரே படுபவர்களையெல்லாம் கைதுசெய்தனர். பறவைகளைச் சுட்டுத்தள்ளுவதுபோல் மக்களைச் சுட்டுத் தள்ளினர். மாவீரன் ரிசாலையும் கைது செய்து சிறையிலிட்டனர்.

ரிசாலின் மீது வழக்குத் தொடரப்பட்டது. நீதிமன்றத்தில் இரு குற்றங்கள் சுமத்தப்பட்டன. அதாவது:

1. இரகசியச் சங்கம் நிறுவினன்.

2. எழுத்தால் புரட்சியை உண்டாக்கினன்.

இந்த இரு குற்றங்களுக்காக ரிசாலைச் சுட்டுக்கொல்லத் தீர்மானித்தது நீதிமன்றம்.

1896ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ஆம் திகதி 'சான்டியாகோ' என்னும் கோட்டை வாயிலில் மக்கள் கூட்டம் கூட்டமாய்க் கூடியிருந்தனர். சிலர் கண்ணீர் வடித்துக்கொண்டிருந்தனர். சிலர் ஆத்திரமிகுதியால் அந்நிய ஆதிக்கம் ஒழிக! மாவீரன் ரிசால் வாழ்க! என்று பேரொலி எழுப்பிக்கொண்டிருந்தனர்.

அந்தக் கோட்டைக்குள் இருந்த ஒரு அறையிலிருந்து மாவீரன் வெளியே வந்தான். அவன் கைகளைப் பின்புறம் வைத்து விலங்குமாட்டினர் காவலாளிகள். வீரன் முன்செல்ல, துப்பாக்கியேந்திய காவலர்கள் இருபுறமும் செல்லக் கோட்டை வாயிலை அடைந்தனர். வாயிலில் இருந்த மக்கள் வீரனைக்கண்டதும், 'வாழ்க ரிசால்! வாழ்க எங்கள் தலைவன்! வாழ்க எங்கள் வழிகாட்டி! வீழ்க அந்நிய ஏகாதிபத்திய ஆட்சி!' என்று முழங்கினர். அந்தக் கூட்டத்தைச் சமாளிக்க பொலிசார் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஆனாலும் முடியவில்லை. கடைசியில் மாவீரன் தூக்கு மேடையில் ஏற்றப்பட்டான். கைவிலங்கு கழற்றப்பட்டது.

பின்னர் சிறையதிகாரி 'நீ இறப்பதற்குமுன் ஏதாகிலும் சொல்ல விரும்பினால் சொல்லிக்கொள்' என்றார்.

## வந்தாறுமூலை சி. சுந்தரலிங்கம்

மாவீரன் ரிசால் அங்கிருந்த கூட்டத்தைப் பார்த்தான்—சோகமே உருவெடுத்தாற்போல் இருந்தது. அவனை அன்புடன் அணைத்து மகிழும் மனைவி அழுது புலம்பிக்கொண்டு நின்றாள்.

பின்னர் அந்தக் கூட்டத்தை நோக்கி, பேசலானன்.

'அன்புள்ள பெரியோர்களே! அருமைத் தாய்மார்களே! தோழர்களே! தூக்கு மேடையில் நின்றுகொண்டிருக்கும் எனக்குக் கடைசித் [illegible] [illegible]ம் தந்து மகிழ்வைத்தந்[illegible] காக என் மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக்கொள்கிறேன். நான் இன்னும் சற்று நேரத்தில் உங்களைப் பார்க்கமுடியாது. பிணமாகப் போகிறேன். என் உயிர் என் உடம்பில் இருக்கக் கூடாது என்று எண்ணியவர்கள், என் உடம்பிலிருந்து உயிரைப் பிரிக்கச் செய்த ஏற்பாடு இந்தத் தூக்கு மேடை. இந்தத் தூக்கு மேடையைக்கண்டு தொடை நடுங்கும் கோழை மரபில் பிறந்தவனல்ல நான். இந்தத் தண்டனை கிடைக்குமென்று சிறுவயதிலேயே எனக்குத் தெரியும். எனவே தான் இக்கொடும் தண்டனை எனக்குப் பெரும் ஆச்சரியமாகத் தோன்றவில்லை.

'ஆனல் நான் ஒன்றுக்காக மட்டும் வருந்துகிறேன். இந்த நாடு நான் பிறந்த எழில் மிகுந்த நாடு; அந்நியர் கைகளில் இருந்து விடுபட்டு உரிமையுடன் வாழும் வாழ்வைப் பாராமலே இறந்துவிடப் போகிறேன். இதற்காகத்தான் நான் வருந்துகிறேன். ஆனாலும் எனக்குப் பதில் என் வேலையைத் தொடர்ந்து செய்ய நீங்கள் இருப்பதைக் கண்டு ஆறுதல் அடைகிறேன். ரிசால் கொலைக்குற்றம் புரிந்து தூக்குமேடையேறியவனல்ல. நாட்டை மீட்கப் பாடுபட்டவன். அவன் எண்ணம் முடிவடையும்முன் இறந்துவிடுகிறான் என்றால் இதன் பொருள், ரிசால் இருந்தால் அந்நியரை ஒழித்துவிடுவான். ஆனல் அவனை ஒழித்துவிட்டால் அந்நியராகிய நாம் இங்கே நிலைபெறுவோம் என்பதுதான். ரிசால் இறந்தால் பிலிப்பைன் நாட்டு மக்களின், மானம், மரியாதை, கலை, கலாச்சாரம் ஆகியவைகள் இறந்துவிடும் என்று கருதிய ஆட்சியாளர், தூக்கு மேடையை எனக்குப் பரிசளித்தனர். அதை நான் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்கிறேன். ஆனல் நீங்கள் செய்யவேண்டிய ஒன்றை மட்டும் நினைப்பூட்டுகிறேன்.

'அருமைத் தோழர்களே! இந்த நாடு உங்களுடையது. உங்கள் முன்னோர் உரிமையுடன் ஆண்டது. ஆனல் நீங்கள் இன்று அடிமைகள். உரிமைகள் பிடுங்கப்பட்டுக் கிடக்கிறீர்கள். இதை உணருங்கள். உங்கள் உரிமையைப் பறித்த அந்நிய ஆட்சியை விரட்டி அடித்து உரிமை உடையவர்களாக வாழுங்கள். உங்கள் நாட்டை நீங்களே மீட்க வேண்டும். மனம்வைத்தால் முடியும். உங்களுக்குச் சிந்தனை இருக்கிறது. செயலாற்றும் திறமை இருக்கிறது. ஆகவே முன்னேறுங்கள். என்னைப் பெற்றெடுத்தவர்களே! உறவினர்களே! உங்களுக்கு என் கடைசி வணக்கம் செலுத்துகிறேன்.

'என்னைக் கணவனாக அடைந்த என் மனைவியே! என் பிரிவுக்காக வருந்த வேண்டாம். நான் விட்டுச் சென்ற வேலையைத்தொடர்ந்து செய்! பிறரைச் செயலாற்றத் தூண்டு! கடைசியாக உங்கள் அனைவருக்கும் என் புரட்சி வணக்கம். என் தாய் நாடே உன் கைவிலங்குகள் அறுபடும் காட்சியைக் காணுமலே இறந்துவிடப் போகிறேன். என்றாலும் எதிர்காலம் உன் விலங்கை உடைத்தெறியும் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு. என் கடைசி வீர வணக்கத்தையும் உனக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.'

என்று சொற்பொழிவு நிகழ்த்தி முடித்தான்;

இந்த வீர உரை உணர்ச்சி நிரம்பிய பேச்சுக்களை கேட்ட மக்களின் கண்களை மாத்திரமல்ல மனதையும் கலங்க வைத்தது.

அப்போது ரிசாலின் முன் துப்பாக்கியேந்திய இரண்டு சிப்பாய்கள் நின்றனர். அதிகாரி 'சுடு' என்றான். துப்பாக்கியிலிருந்து வெளிவந்த குண்டுகள் ரிசாலின் உயிரைக் குடித்தன.

இந்தக்கோரக் காட்சியைக் கண்ட மக்கள் பதறிக், கதறிக், குமுறியழுதனர். ரிசாலின் மனைவி மயங்கி விழுந்தாள்.

மாவீரன் ரிசாலின் பிணம் பாகோ கல்லறைக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

கணவன் மீது துப்பாக்கிக் குண்டுகள் பாய்ந்ததும் மயங்கி விழுந்த மனைவி மயக்கம் தெளிந்து எழுந்தாள்: எங்கே எங்கே 'என் ரிசால்! எங்கே உங்கள் தலைவன்' என்றாள். அவர் உடம்பைக் கல்லறைக்கு எடுத்துச் சென்றுவிட்டனர் என்றனர் அருகிலிருந்தோர்.

'ஆ! என்ன? பிலிப்பைன் வாசிகளுக்காகப் பாடுபட்டவரை அந்த நாட்டு மக்கள் தலைவனை அந்நியன் எப்படி அடக்கம் செய்யலாம். தோழர்களே நீங்கள் கோழைகளா? நமக்கு வீரமில்லையா, மாவீரர் ரிசால் ஏன் மடித்தார்? அவர் உயிரைக் குடித்த இந்த அந்நிய ஆட்சி இன்னுமா நீடிக்க வேண்டும். முடியாது. அதை நாம் தூள்தூளாக்கவேண்டும். வீறுகொண்டு எழுங்கள். வாழ்ந்த நம் நாட்டை விழச் செய்தவர்களை வீழ்த்துவோம் புறப்படுங்கள். ஆயுதம் இல்லை என்று அஞ்ச வேண்டாம். கண்ணெதிரே படுவதைக் கையிலேந்திப் புறப்படுங்கள். கொடுங்கோலாட்சி இன்றேடொழியட்டும், புறப்படுங்கள்! வாருங்கள்' என்று கூறி முன்னே ஓடினள் அந்த வீர மங்கை.

அவளைப் பின் தொடர்ந்து ஆயிரக் கணக்கான மக்கள் திரண்டனர்.

தூக்குமேடைகள் தூள் தூளாயின அந்நிய ஆட்சி

(8-ம் பக்கம் பார்க்க)

# இளைஞர் ஈழம்

எதிர்காலத்தில் சுதந்திரத்தமிழ் ஈழத்தை உருவாக்கப்போகும் என் அருமைத்தம்பி தங்கைகளே!

உங்கள் பொங்கும் உணர்வுகளை — குமுறும் உணர்ச்சிகளை நான் அறிவேன். உங்கள் உணர்ச்சிகளுக்கு சுதந்திரனில் 'களம்' அமைத்துக்கொடுக்க முடிவு செய்துள்ளேன்.

இந்த வாரம் வந்தாறுமூலையைச் சேர்ந்த தம்பி சுந்தரலிங்கம் எழுதிய விடுதலை வீரன் 'ஜோசிரிசால்' பற்றிய உணர்ச்சிமிகு கட்டுரை இடம் பெறுகிறது. இதுபோன்ற விடுதலை வீரர்களின் வரலாறுகளை—விடுதலைப் போராட்ட நிகழ்ச்சிகளைப்பற்றி எழுதி அனுப்புங்கள்.

உங்கள்

கோவை அண்ணு

---

குயுக்தியார் பதில்கள் அடுத்த கிழமையிலிருந்து மீண்டும் தவறுமல் இடம் பெறும்:- பின் வரும் முகவரியை வெட்டி ஒட்டி உங்கள் கேள்விகளை அனுப்புங்கள்!

திருவாளர் குயுக்தியார்,
மே/பா.
சுதந்திரன்
த. பெ. இல. 1183
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலரங்கு

## தமிழ் ஈழ அரசியலில் 'கிலுகிலுப்பை'க்காரர்கள்

அன்பு நண்பா,

ஒரு திருவிழாக் காட்சி பார்த்திடுவோம்— என்னுடன் வருகிறாயா? என்ன இது—தமிழினத்துக்கு என்றுமில்லாத பேராபத்து சூழ்ந்திருக்கும் இந்த நேரத்தில் — எண்ணற்ற தமிழ் இளைஞர்கள் தம் இளமை வாழ்வைப் பலி கொடுத்து கொடுஞ்சிறையில் ஆண்டுக்கணக்காக — மாதக் கணக்காக — தவித்திடும் போது விழாவுக்கும் வேடிக்கைக்கும் இவன் அழைக்கிறானே என்றுதானே நண்பா முகத்தைச்சுளிக்கிறாய்? காரணமில்லாமல் இல்லை— காரணத்தோடுதான் அழைக்கிறேன் — கொஞ்சநேரம் வா என்னுடன்!

விழா நடைபெறும் வீதியெங்கும் விதவிதமான அலங்காரங்கள் — வண்ணவிளக்குகள் — வண்ணத்துப்பூச்சிகளென உலவிடும் வண்ணக் கிளிமொழிப் பாவையர் அங்குமிங்கும் கலகல சிரிப்பொலியுடன் கைவளை குலுங்கிட நடந்தபடி இருந்திடுகின்றனர் — வீதிக்கு இரு புறமும் கடைகள்—அக்கடைகளில் மனதை இழுக்கக் கூடிய விதவிதமான அழகுப்பொருட்கள் —அப்பொருட்களை வாங்க வரும்படி கூவியழைத்திடும் கடைக்காரன்—இத்தனை சந்தடிக்கும் மத்தியிலேதான் திருவிழாவுக்கு செல்கிறான் ஒரு பக்தன்— கூடவே தனது குடும்பத்தவரையும் அழைத்துக்கொண்டு!

இவனது முக்கிய மூலாதார இலட்சியம் இறைவனை வணங்குவதுதான்! வேடிக்கை விநோதப் பொருட்களில் மனதைப் பறி கொடுத்திடுவது அல்ல! ஆனால் அவனது குடும்பத்தினரை—குழந்தைகளை — பொருட்களின் மீது ஆசைகாட்டி இழுக்க முயற்சிக்கிறான்— கடையிலே நின்று கிலுகிலுப்பை காட்டுவோன் சுவாமி தரிசனத்துக்கு செல்லும்வழியிலேயே! இவன் உண்மையான பக்தன்-இறைதரிசனமே இலட்சியமாகக்கொண்டு திருவிழாவுக்கு வந்தவன்! எனவே விளையாட்டுப்பொருட்களில்— வேடிக்கை விநோதங்களில் தனதுபிள்ளைகள் மனதைச்செல்ல விடாது — அதோ பார் சுவாமி என்று கடவுளை — அதாவது 'இலட்சியத்தை'யே சுட்டிக்காட்டுகின்றான்! ஆமாம்— எந்த நோக்கத்துடன் திருவிழாவுக்கு வந்தானோ அந்த நோக்கத்திலிருந்து தனது குடும்பத்தினரை திசை திரும்பவிடாமல் — இறைவனையே சுட்டிக்காட்டுகிறான்—இவன் உண்மையான பக்தன்!

நண்பா, இந்தப் பக்தனைப் போலவே தான்— இன்றைக்கு தமிழர் கூட்டணியும் ஆளுங்கட்சியினதும் அவர்களது அடிவருடிகளினதும் வேடிக்கை விநோதங்களில்— அற்பசொற்ப சலுகைகளில் — மனதைப் பறி கொடுத்து, திசை திரும்பி இலட்சியத்தை மறந்து விடாதவாறு தமிழ் மக்களுக்கு 'இன விடுதலை' என்னும் ஒரே இலட்சியத்தையே சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கின்றது!

இன்னறக்கு, தமிழ்ப் பகைவர்கள் தமிழ் மக்கள் மத்தியிலே தமிழ் ஈழத்திலே— பல உருவங்களில்— பலவடிவங்களில் உலவிக்கொண்டிருக்கிறார்கள் 'தேசிய ஐக்கியம்' 'தேசிய ஒற்றுமை' என்றெல்லாம் பிதற்றிக்கொண்டு திரிகிறார்கள் சிலர்; 'முற்போக்கு' என்று கூறிக்கொண்டு திரிகிறார்கள் வேறு சிலர்; சிங்கள முற்போக்கு சக்தியுடன் சேர்ந்தாலே விமோசனம் என்று முணுமுணுக்கத்தொடங்கியிருக்கிறார்கள் மூக்கறுபட்ட இன்னும் சிலர்; இப்படிதமிழினத்தின் எதிரிகள் வெவ்வேறு கோஷங்களுடன், வெவ்வேறு வேஷங்களில் தமிழ் மக்களைச் சுற்றி சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள்!

தமிழினத்தின் எதிரிகள் எந்தெந்த வழிகளிலிருந்து வருகிறார்கள் — எந்தெந்த உருவங்களில் வருகிறார்கள் — என்னென்ன கோஷங்களை எழுப்பிக்கொண்டு வருகிறார்கள் என்பதையெல்லாம் ஈழத்தமிழர் சமுதாயம் இனங் கண்டு எச்சரிக்கையுடன் இருந்திடவேண்டிய காலம் இது!

தமிழ் ஈழத்தில் சிங்கள அமைச்சர்கள் இப்பொழுது எல்லாம் அவசரகாலச் சட்டத்தின் பாதுகாப்புடன் — ஆயுதம் தாங்கிய படைப்பட்டாளம் சுற்றிவர—அடிக்கடி பவனிவரத் தொடங்கியிருக்கிறார்கள்! அங்கு கறுப்புக் கொடிகளைக் கண்டு கதிகலங்கித் திரும்புகிறார்கள்—வாயில் வந்தபடியெல்லாம் தமிழர் கூட்டணியினரைத் திட்டிவிட்டு!

சிங்கள அமைச்சர்களின் நோக்கம் நமக்கு நன்றாகத் தெரியும்—அவர்கள் தாங்கள் கொண்டுவந்து நிறைவேற்றிய பௌத்த சிங்கள அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் நம்மை அடிமைகளாக என்றென்றும்வைத்துக்கொள்ளவே ஆசைப்படுகிறார்கள்—அரசியல் சட்டத்தைத் திருத்தி தமிழ் மக்களுடைய உரிமைகளை வழங்கி, சிங்கள மக்களுடன் சமத்துவம் அளிப்பதற்கு துளிகூட இஷ்டமில்லாதவர்கள் அவர்கள்—இது நமக்கு நன்றாகத் தெரியும்!

அரசியலமைப்புச் சட்டத்தை திருத்தி — நமது ஆறு அம்சக்கோரிக்கைகளை வழங்க இன்றைய சிங்கள ஆட்சி மறுப்பது மட்டுமன்றி — சிங்கள ஒற்றையாட்சியிலிருந்து விடுபட்டு நாம் நமது தாயகத்தில் சொந்த ஆட்சி நிறுவுவதற்காக நடத்தவிருக்கும் விடுதலைப் போரையும் கிள்ளியெறியத் தயாராக சீனாவிலிருந்து ஆயுதங்களை வாங்கிக் குவித்து வைத்திருப்பவர்கள் இன்றைய ஆட்சியாளர்கள் என்பதையும் தமிழினம் அறியும்!!

எனவே இன்றைய ஆட்சியினர் — அதிகார பீடத்திலுள்ளோர்—தமிழின் பகைவர்கள் என்பது தெளிவான—பகிரங்க இரகசியம்! இவர்கள் எத்தனை கவர்ச்சிகரமான இனிப்பான வார்த்தைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு சென்று தமிழ் மக்களிடையே கொட்டினாலும்—இவர்களது பேச்சுக்களை எத்தனை பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் வரிக்குவரி தவறாது பிரசுரித்தாலும்—எத்தனை தரம் வானொலியில் இவர்களது பேச்சுக்களை மறு ஒலிபரப்பு செய்தாலும்—தமிழ் மக்கள் செவிகளில் அவை துளியாவது விழப்போவதில்லை!

இந்த அமைச்சர்கள் தமிழ் ஈழத்துக்கு வருகைதரும் போதெல்லாம் — அவர்களுக்கு பல்லிளித்து நிலபாவாடை விரித்து — கொடி குடை ஆல வட்டம் பிடித்து—மேளதாளத்துடன்சோட சோபசாரம் செய்து காலில்விழுந்து வணங்கி தொண்டனிடுகிறதே அடிமைப் புத்தி கொண்ட அடிவருடிக்கும்பல் — இந்த ஐந்தாம் படைகள் தாம் தமிழினத்துக்கு தீராத அவமானத்தைத் தேடித்தந்து கொண்டிருக்கிறார்கள்!

அமைச்சர்கள் தென்னிலங்கைக்கு அடிக்கடி செல்கிறார்கள்—அங்கெல்லாம்—வடக்கில் தரப்படுவது போன்ற 'எஜமான' வரவேற்பை எந்தச் சிங்களவனும் அவர்களுக்குத் தருவதில்லை—தமிழ்ப் பகுதியில்தான் தமிழ் மக்கள் மத்தியில் தவறிப்போய் தமிழனாகப் பிறந்து விட்ட சில குடிகேடர்கள்—தாய்ப்பிறவிகள்— அடிமைகளாக நின்று அமைச்சரின் கால்களில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி அவமதிப்பை தேடித்தருகிறார்கள் தமிழினத்துக்கு!

நான் முதலில் சொன்னேனே திருவிழாக் கதை—அந்தக் கதையில் கூறியதுபோல — சுவாமி தரிசனத்துக்காக சென்றுகொண்டிருக்கும் பக்தனை — கிலுகிலுப்பை காட்டி — வேடிக்கை விநோதம் காட்டி தன்பக்கம் இழுக்க முயலும் கடைக்காரனைப்போல்—இன விடுதலை யென்னும் ஒரே இலட்சியத்தையே குறிக்கோளாகக்கொண்டு தியாகப் பாதையில் நடந்துவரும் தமிழினத்தை, அந்த இலட்சியத்திலிருந்து திசை திருப்ப முயல்கின்றனர் இந்த எட்டப்பர் திருக்கூட்டத்தினர்!

தமிழினத்தை விடுதலைப்பாதையிலிருந்து பிரித்து—சிங்கள ஒற்றையாட்சிச் சிறைக்குள் பூட்டி வைத்திட உதவி செய்தால்தான் இவர்களுக்கு சிங்கள எஜமானர்களிடமிருந்து எலும்புத்துண்டு வந்துவிழும்! தமிழ் மக்களிடையே கொழுந்துவிட்டெரியும் உரிமையுணர்ச்சித் தீயை—விடுதலைக்கனலை—எப்பாடு பட்டாவது அணைத்துவிடவேண்டும் என்று படாதபாடு படுகிறது சிங்கள ஆட்சி. அந்த ஆட்சிக்கு உதவியாக—நாமே அந்தக் கைங்கரியத்தை செய்துவிடுகிறோம் என்று முன்வந்திருக்கிறது இத்துரோகக்கும்பல்!

நண்பா—தமிழ் தேசிய இனத்தின் சார்பாக உள்ளபடியே அமைச்சர் குமாரசூரியர், தியாகராசா, அருளம்பலம், துரையப்பா விசுவநாதன், போன்றோரையும் ஆளுங்கட்சிக்கு அடிவருடும் அனைவரையும் கேட்பேன்! புதிய அரசியல் சட்டத்தில் தமிழ் மக்களின் சகல உரிமைகளும் வழங்கப்பட்டு விட்டதாக நீங்கள் திருப்தியடைந்திருக்கிறீர்கள் — புதிய அரசியல் சட்டம் திருத்தப்பட்டு தமிழினத்தின் உரிமைகள் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று நீங்கள் எங்கும் எப்போதும் அரசை வற்புறுத்தியதாக நாம் கேள்விப்படவில்லை—ஒருவேளை 'இரகசியமாக' கேட்டு அது மறுக்கப்பட்டதோ என்னவோ எங்களுக்குத்தெரியாது —

ஆனால் எங்களைப் பொறுத்தவரை — பெரும்பான்மையான தமிழ் மக்களைபொறுத்தவரை—புதிய அரசியல் சட்டத்தை அவர்கள் இஞ்சிற்றும் ஏற்றுக்கொள்ளவில்லை. புதிய அரசியல் சட்டம் தமிழினத்தின் மரண சாசனம் என்று நாங்கள் கருதுகிறோம்! புதிய அரசியல் சட்டம் தமிழினத்தின் உரிமைகளை வழங்கக் கூடியதாக—தமிழர் கூட்டணி தந்திருக்கும் ஆறுஅம்சத்திட்டத்தின் அடிப்படையில் திருத்தப்படவேண்டும்— இன்றேல் 'தமிழ் ஈழம்' தன்னாட்சி பெற்றேயாக வேண்டும் என்கிறோம்!!

ஆளுங்கட்சிக்கு அடிவருடும் தமிழர்களே! உங்களை பார்த்துக் கேட்கிறோம். புதிய அரசியல் சட்டத்தை [illegible] — தமிழினத்தின் சுயாட்சியைத்தை அங்கீகரிக்கும்படி — ஆட்சியாளர்களை [illegible] உங்களுக்குத்தான் தெம்பு, திராணி எதுவுமில்லை! அப்படிக் கேட்பதற்கு உங்களுக்கு நாக்குப்புரளாது! தப்பித்தவறிப்புரண்டால் கிடைக்கும் அற்ப சலுகைகளும், இருக்கும் பதவிகளும் அப்புறம் நிலைக்காது—நீடிக்காது! அதனால் வாய் மூடி மௌனிகளாக நீங்கள் இருந்தால் அது பற்றி நாம் வருத்தப்பட மாட்டோம்!

ஆனால், தமிழினத்தின் உரிமைகளை மேலும் வென்றெடுப்பதற்காக தமிழர் கூட்டணி நடத்தும் போராட்டத்துக்கு நீங்கள் ஏன் முட்டுக்கட்டைகளாக இருக்கிறீர்கள்? தமிழினத்தை சுதந்திரப் பாதையிலிருந்து பிரித்து, அடிமைப் படுகுழியில் தள்ளிவீழ்த்துவதற்கு ஏன் முயலுகிறீர்கள்? நெஞ்சாரப் பொய் சொல்லி — தங்கத்தமிழினத்தின் ஐந்தாம் படைகளாக ஏன் இயங்குகிறீர்கள்? தமிழர்களின் முதுகில் ஏன் குத்துகிறீர்கள்?

நண்பா, ஆளுங்கட்சியை அண்டிப்பிழைக்கும் தமிழர்களிடம் இதைத்தான் நான் கேட்க விரும்புகிறேன்! அவர்கள் அரசை அண்டி தங்கள் வளமான வாழ்வை வளர்த்துக்கொள்ள ஆசைப்பட்டால் தாராளமாக அப்படிச் செய்யட்டும்—ஆனால் இனத்தைக் காட்டிக்கொடாமல்!! தமிழைக் காட்டிக்கொடாமல்!

இனத்தைக் காட்டிக்கொடுக்காவிட்டால் — அரசிடமிருந்து வீழும் சலுகைகள் நிறுத்தப்பட்டுவிடுமே! என்ன செய்வோம் — என்று அவர்கள் கூறுவார்களானால்—இனத்தைக் காட்டிக்கொடுத்து வயிறுவளர்ப்பதைவிட — இனத்தைக் காட்டிக்கொடுத்து சலுகைகள் பெறுவதைவிட — ஒரு துளி நஞ்சுடன் உயிரைப் போக்கிடுவது உயர்ந்த பண்புள்ள செயலாகும் என்பதை இவர்கள் உணர வேண்டும்!!

எப்படித்தான் எழுதியென்ன — எப்படித்தான் எடுத்துச்சொல்லியென்ன — இடித்துரைத்தென்ன—துரோகிகள் துரோகிகள் தாம்—அவர்கள் ஒருபோதுமே திருந்தப்போவதில்லை!

''தமிழ்ச் சமுதாயத்தின் வரலாறு அவ்வப்போது ஒவ்வொரு துரோகக் கூட்டத்தையும் சந்தித்துப் பின் மீண்டெழுந்திருக்கிறது. ஒவ்வொரு கட்டத்திலும் துரோகம் தலைதூக்கினால்தான் தமிழ் சமுதாயம் ஆர்த்தெழுகிறது! தூங்கும் புலி இடறப்படும் பொழுதுதான் 'எனக்கா துரோகம்? ஒரு கை பார்த்துவிடுகிறேன்' என்று ஆர்த்தெழுகிறது. இது தமிழ் சமுதாயத்திற்கு வழக்கமாகிவிட்ட ஒன்று!''

— என்று கலைஞர் மு. க. கூறியதுபோன்று துரோகிகளும்ஒருவிதத்தில்விடுதலைப்போராட்டத்துக்கு உந்துவிசையாகவே பயன் படுகிறார்கள்—அப்படிப் பயன்படுத்திக்கொள்ள வேண்டியது தமிழினத்தின் கடமையாகும்!

அதே நேரத்தில் நான் துவக்கத்தில் கூறியதைப் போன்று—தேசிய ஐக்கியம், தேசிய ஒற்றுமை, ஒருமைப்பாடு, முற்போக்கு, சோசலிசம், என்றெல்லாம் கூறிக்கொண்டு — தமிழினத்தை விடுதலைப்பாதையிலிருந்து பிரிப்பதற்கு—திசைதிருப்புவதற்கு — கிலுகிலுப்பை காட்டிக்கொண்டிருக்கிறார்கள் — வேடிக்கை விநோதம் காட்டிக்கொண்டிருக்கிறார்கள் தமிழ்த்துரோகிகள். இவர்களது பல்லவிக்கு அனுபல்லவி பாடி வருகின்றன இந்நாட்டு நாளேடுகள்!

எனவே தமிழர் சமுதாயம்—தமிழினத்தின் எதிரிகளின் கோஷங்களையும் வேஷங்களையும் நன்கு அடையாளம் கண்டுகொண்டு—எச்சரிக்கையுடன் சுதந்திர சுயாட்சிப்பாதையில்—தங்கத்தமிழ் ஈழம் அமைப்பதையே தனது ஒரே இலட்சியமாக கொண்டு வேகமுடன் செல்ல வேண்டும் —

நண்பா, தமிழர் சமுதாயம் வேடிக்கை விநோதங்களில் — வரட்டுக் கூச்சல்களில் — வீழ்ந்து விடாதபடி தடுத்து நிறுத்தி — 'சிங்களத்தேசியம்' என்ற மாயமான் பின்னல் சென்று அழிந்து விடாதபடி காப்பாற்றி—விடுதலைப் பாதையில் இனத்தை வழிநடத்திச் செல்வதுதான் உனதும் எனதும் விடுதலை விரும்பிகள் அனைவரினதும் நோக்கமாக இருந்திட வேண்டும்!

பெறுவோம் தமிழ் ஈழம் எனும் உறுதியுடன் பணியாற்றுவோம்!

உன், அன்புத் தோழன்.

கோவை மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணம்

## தார்மீக ஆதரவை கோருவதில் தவறு என்ன?

தமிழர் தந்தை பெரியவர் செல்வா அவர்களும், திரு. அ. அமிர்தலிங்கம் அவர்களும் சென்ற ஆண்டு பெப்ரவரித் திங்களில் சென்னைக்கு சென்றிருந்தது பற்றியும் அங்கு தந்தை செல்வாவுக்கு சென்னை மாநகரசபை அளித்த வரவேற்புப் பற்றியும் — சென்னையிலுள்ள அரசியல் தலைவர்களை அவர்கள் சந்தித்து உரையாடியது பற்றியும்—இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டி பற்றியும், எதுவித ஒளிவு மறைவுமின்றி பகிரங்கமாகவே சுதந்திரனில் அப்போதே வெளியிட்டிருந்தோம்!

செல்வா அவர்களது சென்னை விஜயம் இரகசியமானதாகவோ — அல்லது மறைக்கப்படவேண்டியதாகவோ இருந்தால்—சுதந்திரனில் அவற்றை நாம் பகிரங்கமாக வெளியிட்டிருக்க வேண்டியதில்லை — வெளியிட்டிருக்கவும் மாட்டோம்!

ஆனால் செல்வா அவர்களின் விஜயத்தில் ஒளிவு மறைவோ — கபடத்தனமோ இருக்கவில்லை. இந்நாட்டில் சூதும் கபடமும் அற்ற ஒரே தலைவர் உண்டென்றால் அது நமது தந்தை செல்வநாயகம் அவர்கள்தான் என்பது மாற்றாரும் ஒப்புக்கொண்ட உண்மையாகும்.

செல்வா அவர்கள் வைத்திய பரிசோதனைக்காக விசா பெற்று சென்னைசென்றது உண்மை; அப்படிச்சென்றபோது இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப்பேசியதும், இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்ததும், சென்னை மாநகராட்சி அளித்த வரவேற்பை ஏற்றுக்கொண்டதும் உண்மை!

இதில் ஒளிப்பதற்கு மறைப்பதற்கு எதுவுமில்லை—ஒளிக்கப்படவேண்டியதும் எதுவுமில்லை—ஒளிக்கவேண்டிய அவசியமும் நமக்கில்லை!

வைத்திய பரிசோதனைகாக இந்தியா செல்லும்போது—அங்குள்ள அரசியல் தலைவர்களை சந்திக்க கூடாதென்றோ—மாநகராட்சி வரவேற்பு தந்தால் அதை ஏற்கக் கூடாதென்றோ, இலங்கை அரசு நிபந்தனை எதுவும் போட்டு செல்வாவுக்கு விசா வழங்கியதாக நாம் கேள்விப்படவில்லை. அப்படி ஏதாவது நிபந்தனையுடன் விசாபெற்று தந்தை செல்வா இந்தியா சென்றிருந்தாரானால்—அந்த நிபந்தனைக்கமைய அவர் நடந்துகொண்டிருப்பார். அப்படி அவர் நிபந்தனையை மீறியிருந்தால் அதைத்தவறு என்று சுட்டிக்காட்டுவதற்கு அரசுக்கு அதிகாரமுண்டு

ஆனால் செல்வாவின் சென்னை விஜயம் நிகழ்ந்து ஒன்றரை ஆண்டுகழிந்தும்-இப்போதுகூட அதுபற்றி மீண்டும்மீண்டும் வேண்டுமென்றே 'வத்தி' வைத்துப்பேசி வருகின்றனர்—செல்வா இந்திய அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேசியதற்கு பின்னால் ஏதோ பெரிய "சதி" இருப்பதாக கூறி சிங்கள இனவெறியை உசுப்பி விடுவதில் வெகு தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்—ஆளுங்கட்சியினரும்—ஆளுங்கட்சியை ஆதரித்துவரும் 'ஜனவேகய' போன்ற சிங்கள ஏடுகளும்!

கடந்தவாரம் தேசியபேரவையில் உரையாற்றிய பொறுப்பு வாய்ந்த பிரதியமைச்சரான தேசப்பிரிய சேனநாயகா என்பவரும் செல்வாவின் இந்திய விஜயம் பற்றி பொறுப்பற்ற முறையில் பேசி சிங்கள மக்களுக்கு பூச்சாண்டி காட்டியுள்ளார்.

ஒரு நாட்டின் அரசியல் தலைவர்கள் — மற்றோர் நாட்டின் அரசியல் தலைவர்களைச் சந்தித்து அரசியல் பிரச்சினைகளையிட்டு பேசுவது—உரையாடுவது—ஏதோ ஒன்றும் உலகில் நடக்காத புதிய விஷயமல்ல!

இந்நாட்டிலுள்ள மாஸ்கோ சார்பு கம்யூனிஸ்ட் தலைவர்கள் அடிக்கடி 'வைத்திய பரிசோதனை' என்று கூறிக்கொண்டு மாஸ்கோவுக்கு செல்கிறார்கள்; அங்கு மாதக்கணக்காக முகாமிட்டு தங்குகிறார்கள்; ரஷ்ய நாட்டுத் தலைவர்களுடன் 'இரகசிய' பேச்சுவார்த்தை நடத்திவிட்டு திரும்புகிறார்கள்— அவர்கள் அங்கு என்ன 'சதி' செய்துவிட்டு திரும்பியிருக்கிறார்கள் என்பதை அறிய யாரும் முயற்சிப்பதுமில்லை—அதுபற்றி பேசுவதுமில்லை— அவர்கள் அதுபற்றிக் கூறுவதுமில்லை.—அரசு கவலைப்படுவதுமில்லை.

இந்நாட்டிலுள்ள சீன சார்பு கம்யூனிஸ்டுகள் அடிக்கடி 'பீக்கிங்' செல்கிறார்கள்—மாசேதுங்குடன், சௌ-என்-லாயுடன், ஏனைய சீனக் கம்யூனிஸ்ட் தலைவர்களுடன் 'குசு குசு' பேச்சுவார்த்தை நடத்துகிறார்க —என்ன 'சதி' செய்துவிட்டுத் திரும்புகிறார்கள் என்பது யாருக்கும் தெரியாது.

ஆனால் எதுவித ஒளிவுமறைவுமின்றி தந்தை செல்வா அவர்கள் தமிழ்நாட்டுக்கு சென்று திரும்பி து பற்றியே ஆட்சிபீடத்திலுள்ளோர் — பொறுப்புவாய்ந்த அமைச்சர்கள்—திருப்பிதிருப்பிப் பேசுகிறாகள் என்றால் அதன் நோக்கம் சிங்கள இனவெறியை உசுப்பிவிடுவதுதான்!

தமிழ் நாட்டு மக்களும், ஈழத்தமிழ் மக்களும், மொழியால், இனத்தால், கலாசாரத்தால், கலையால், வாழ்க்கை முறையால், மதத்தால், பழக்கவழக்கங்களால், பண்பால்-பிணைக்கப்பட்டவர்கள்—இணைக்கப்பட்டவர்கள்! அப்படிப்பட்ட தமிழ்நாட்டு மக்கள் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் நிலையை—ஈழத்தில் அவர்கள் படும் கஷ்டங்களை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுவது இயற்கையானது — ஈழத்தமிழ் மக்களின் தலைவரை, அவர்கள் அகமும் முகமும் மலர வரவேற்பதும் இயற்கையானது!

சென்னை சென்றிருந்த பெரியவர் செல்வாவுக்கு அத்தகைய பாசம் மிகுந்த வரவேற்பை இந்தியத் தமிழக மக்களும், தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களும் அளித்தார்கள்—அவ்வரவேற்புக்களை ஈழம் வாழ் 35 இலட்சம் தமிழ் மக்களின் சார்பில் தந்தை செல்வா ஏற்றுக்கொண்டார்!

அப்படி தந்தை செல்வா அவற்றை ஏற்றுக்கொண்டது தவறு என்பதா ஆளுங்கட்சியினரின் வாதம்?

இந்த வரவேற்புக் கூட்டங்களிலும் — இந்தியப் பத்திரிகையாளர்கள் மாநாட்டிலும், ஈழத்தமிழினத்தின் அரசியல் அவல நிலையை—ஈழத்தமிழர்களின் உரிமைகள் எவ்வாறெல்லாம் பறிக்கப்பட்டுள்ளன என்பதை தந்தை செல்வா எடுத்துரைத்தார்—அதுவும் உண்மை!

இதில் எந்தத் தவறைக் காணுகிறது ஆளவந்தார் திருக்கூட்டம்?

வியட்னாம் விடுதலை இயக்கத்தினரும்; பங்களாதேஷ் விடுதலை இயக்கத்தினரும், பாலஸ்தீன் விடுதலை இயக்கத்தினரும் — இங்கு வந்து இலங்கை அரசினதும், இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகளினதும் ஆதரவைப் பெறுவதைச் சரியான செயல் எனக் கூறுபவர்கள்—பேசும்மொழியால், இனத்தால், கலாசாரத்தால் ஒத்த தன்மையுடைய தமிழ்நாட்டு மக்களிடம் ஈழத்தமிழ் மக்களின் அரசியல் அவல நிலையை தந்தை செல்வா எடுத்துரைத்ததில் என்ன தவறைக்காணுகின்றனர்!

தந்தை செல்வா இந்தியத் தலைவர்களிடம் — ஆயுத உதவி கோரவில்லை—படையுதவி கோரவில்லை— பண உதவி கோரவில்லை! தார்மீக ஆதரவையே கோரினார் — அதுவும் பகிரங்கமாக! இதில் என்ன தவறைக் காணுகிறது ஆட்சிபீடம்!

இந்தியாவிடம் மட்டுமல்ல—இனங்களின் சுயாதிபத்தியத்துக்கும் சம உரிமைக்கும் ஜனநாயகத்துக்கும் மதிப்புக்கொடுக்கும் உலகின் சகல நாடுகளிடமிருந்தும் ஈழத்தமிழினத்தின் விடுதலைப் போருக்கு தார்மீக ஆதரவை தொடர்ந்து கோரவே செய்வோம்!

நியாய புத்தியுள்ள சிங்கள மக்களிடமும் இந்த தார்மீக ஆதரவை நாடி நிற்போம்!

இதை தடைசெய்ய இந்த அரசாங்கத்தினால் ஒருபோதும் முடியவே முடியாது!

எனவே செல்வாவின் சென்னை விஜயத்தை வைத்துக்கொண்டு திரும்பதிரும்ப வீண் வதந்திகளை—பொய் வதந்திகளை—சிங்கள மக்களிடையே விதைத்து மீண்டும் ஒரு வகுப்புக் கலவரத்துக்கு வித்திடவேண்டாம என்று ஆளுங்கட்சியினரை வேண்டிக்கொள்கிறோம். அட்படியொரு கலவரத்தை ஏற்படுத்த நீங்கள் முயன்றால், அது உங்களையே விழுங்கி ஏப்பம் விடுவது நிச்சயத்திலும், நிச்சயம்!

# குமாரசூரியர் கும்பல் முகத்தில் கரி பூசியது 'அமிர்' அறிக்கை!

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் லேக்ஹவுஸ் பத்திரிகைகளுக்கு எதிரான பகிஷ்கரிப்பை தமிழரசுக் கட்சி கொண்டு நடத்த விருப்பதாக யூ. என். பி.த் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தன கூறியதாக ஒரு சில நாளேடுகளில் செய்தியொன்று வெளிவந்தாலும் வந்தது—உடனே தமிழரசுக் கட்சிக்கும், கூட்டணிக்கும் எதிராக கொடுக்கிழுத்துக் கட்டி கொக்கரித்துக் கிளம்பியது குமாரசூரியர் கும்பல்!

நாய்க்கு எங்கே கல்லெறி பட்டாலும் காலைக் காலை தூக்குவதுபோல, தமிழரசுக் கட்சியைத் தாக்குவதென்றால், இவர்களுக்கு இருக்கிற ஒரே வார்த்தை 'முதலாளித்துவ சக்தி' என்பதுதான்!

ஆக விலையுயர்ந்த கார்களில் பவனி வந்து கொண்டு—மாளிகைகளில் சொகுசு வாழ்க்கைவாழ்ந்துகொண்டு—பொழுதுபோக்குக்காக, ஆட்சியில் நிலைத்திருப்பதற்காக 'சோசலிசம்' என்ற வார்த்தை ஜாலத்தைப் பயன்படுத்தும் இந்த முதலாளித்துவக் கும்பல்தான்—உண்மையான சோசலிச இயக்கமான தமிழரசுக் கட்சியை கண்டிக்கப் புறப்பட்டிருக்கின்றது. வேடிக்கையான நிகழ்ச்சி இது!

மூலதன வரியிலிருந்து கம்பெனிகளுக்கு விதிவிலக்களித்து முதலாளிகளை தப்ப வைத்தவர்கள் தமிழரசுக் கட்சியினரல்ல — இந்த அரசாங்கத்தினர்தாம்!

காணிக்குமட்டுமல்ல—செல்வத்துக்கும் உச்சவரம்பு வேண்டுமென்று நாடாளுமன்றத்தில் முதன் முதலில் கோரியவர்கள் தமிழரசுக் கட்சியினர்தாம்—இந்த அரசாங்கத்தினர் அல்ல!

இப்படி பல உதாரணங்களை நம்மால் காட்ட முடியும்!

இப்படிப்பட்ட சோசலிசக் கருத்துக்களை முன் வைக்கும் தமிழரசுக் கட்சியைத்தான்—முதலாளித்துவக் கட்சி என்று திட்டித்தீர்த்து வருகிறார்கள் குமாரசூரியர் அன் கோவினர்!

விசுவநாதன், வி. பொன்னம்பலம், குமாரசூரியர், துரையப்பா, கைலாசபதி... இப்படி எங்கெங்கோ இருந்ததுகள் எல்லாம் 'லேக்ஹவுஸ்' விவகாரத்தைபயன்படுத்தி தமிழரசுக் கட்சியை முதலாளித்துவக் கட்சியென்று திட்டிக்கொட்ட முயன்றனர்!

'லேக்ஹவுஸ்' பகிஷ்கரிப்பு இயக்கத்தில் தமிழர் கூட்டணியின் நிலை தெரியாது—அவசரப்பட்டுஅபிப்பிராயம் சொல்ல முனைந்தவர்களின் முதுகெலும்பை முறித்தெறிந்துவிட்டது, கூட்டணி செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் விடுத்த அறிக்கை.

முதலாளித்துவம், முதலாளித்துவம் என்று தமிழரசுக் கட்சிக்கும், தமிழர் கூட்டணிக்கும் எதிராக ஒப்பாரி வைத்த இந்த போலிச் சோசலிசக் கும்பல்—இனிமேலாவது உண்மையை சரியாக அறிந்துகொண்டு அதற்குப் பின் அபிப்பிராயம் தெரிவிப்பது நல்லது.

அவசரப்பட்டு அபிப்பிராயம் தெரிவித்து முகத்தில் கரிபூசவேண்டுமானால் தாராளமாகப் பூசிக் கொள்ளட்டும்! நமக்கு கவலை இல்லை.

---

### தமிழர்...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

'பகிஷ்கரிப்பு இயக்கத்தில் தமிழர் கூட்டணி பங்கு பற்றுமலிருக்கும் போது — அரசாங்க பிரசுரத்தில் பங்கு பற்றியதாக கூறியிருப்பது முதலாவது விஷமத்தனமான பொய். அடுத்து, தமிழர் கூட்டணியில் நியாயமான கோரிக்கைகளை மூடி மறைத்து, விழுங்கி ஏப்பம் விட்டு விட்டு — 'நாட்டைத் துண்டாடக்கோரும் இனவெறியாளர்கள்' என்று கூட்டணிக்கு பெயர் சூட்டி, சிங்களவர்களிடையே தமிழருக்கு எதிரான இனக் குரோதத்தை தூண்டிவிட தனது பிரசுரத்தின் மூலம் அரசு முயன்றிருக்கிறது.''

—இவ்வாறு கூட்டணி வட்டாரங்களில் கருத்து தெரிவிக்கப்படுகிறது.

---

### கல்லோயாவில்..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மாக நான் எழுப்பவில்லை. கல்லோயாத் திட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னிருந்தே குடியேறி, சிரமப்பட்டு காட்டு நிலங்களைத் துப்புரவு படுத்தி அபிவிருத்தி வேலைகளில் ஈடுபட்டுள்ள மக்களைத் துன்புறுத்த வேண்டாம் என்று தான் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

'இந்தப் பிரச்சினையைச் சுமுகமாக தீர்க்க வேண்டும் என்பதுதான் எனது கோரிக்கை இந்தப் பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்ட தொகுதிகளின் எம். பிக்கள் கொண்ட ஒரு சமரச மாநாட்டையாவது நடத்தி இந்த நெருக்கடிக்கு சுமுகமான ஒரு தீர்வு காண வேண்டும் என விவசாய அமைச்சரிடம் கேட்டுக் கொள்கிறேன்'

அமைச்சர் பதில்

காணி விவசாய அமைச்சர் திரு. ஹெக்டர் கொப்பேகடுவ இதற்குப் பதிலளிக்கையில், 'குறித்த விஷயம் பற்றி இதுவரை எனக்கு எதுவும் தெரியாது. இது விஷயமாக அப்பாறை அரசாங்க அதிபரிடம் நான் பூரண அறிக்கை ஒன்றை கோருவேன்' என்றார்

---

### கம்யூனிஸ்ட்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விக்காது இந்தத் திடீர் நியமனம் செய்யப்பட்டுள்ளது.

கலாநிதி கைலாசபதி தமிழை மட்டுமே கற்றவர். இவர் பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறிய பின்னரே இந்து நாகரிகத்தின் ஒரு பிரிவாக பல்லவர்காலப் பக்திப் பாடல்கள் சிறப்பாகக் கற்பிக்கப்பட்டது.

இந்து நாகரிகம் என்பது தனியே தமிழோடு சம்பந்தப்பட்டதல்ல; இந்திய வரலாற்றை அதுவும் சிறப்பாகத் தென்னிந்திய வரலாற்றைச் சிறப்புப் பாடமாகக் கற்றுக் கலாநிதிப்பட்டம் பெற்றவர்கள் பலர் இலங்கைப் பல்கலைக் கழகத்தில் இருக்கையில், தமிழில் உள்ள சிரேட்ட விரிவுரையாளர்களையும்புறக்கணித்துவிட்டு, துறைத்தலைவராகிய ஒரு பேராசிரியருக்கே தெரியாமல், இந்து நாகரிகத்தைச் சிறப்புப்பாடமாகக் கற்ற விரிவுரையாளர்கள் இருக்கையிலே சமயத்தை அழிப்பதில் முன்னுக்குநிற்கும் கம்யூனிச இயககத்தில் சேர்ந்தவர் என்று கருதப்படும் விரிவுரையாளரை இவ்வாறு இந்து நாகரிகத்தின் தலைவராக நியமித்ததையிட்டு இலங்கையில் உள்ள இந்து மாமன்றங்கள், இந்து இளைஞர் பேரவைகள், இந்து வாலிபர் சங்கங்கள், விவேகானந்த சபை போன்ற நிறுவனங்கள் மௌனம் சாதிப்பதையிட்டு இலங்கை வாழ் இந்து மக்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்துள்ளனர்.

பதவிக்கும் பட்டத்திற்கும் அந்தஸ்திற்குமாக இந்து இயக்கங்களிலே சேர்ந்து தலைமைப் பதவி வகிக்கின்றவர்களின் நடவடிக்கைகளையிட்டுக் குறிப்பாக இந்து இளைஞர்கள் ஆத்திரங்கொண்டுள்ளனர்.

மகளிர் கல்லூரிகளின் அதிபர்களைப் பற்றி அக்கறைப்பட்டு எழுதும் 'சிவனை' நாயகமாக வழிபடும் அடியார்களும் கொம்யூனிஸ்டுகளினது நியமனம் பற்றி எழுதாதிருப்பதன் மர்மம் குறித்தும் இந்து இளைஞர் கவலை கொண்டுள்ளனர்.

---

**காசி ஆனந்தன்**
**வண்ணை ஆனந்தன்**
**சிறையில் இன்று**
**437-வது நாள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய விடுதலைப் போரில் சில நெஞ்சுருக்கும் காட்சிகள்!

எண்ணற்ற தியாகிகளைப் பலிகொடுத்து—பல்லாண்டுகளாகப்போராடி-அண்ணல் காந்தியடிகளின் தலைமையில் இந்தியத் திருநாடு சுதந்திரம் பெற்ற புனிதமான திருநாள் ஆகஸ்ட் 15 ஆகும். இந்த ஆகஸ்ட் 15ல் இந்திய மக்கள் தங்கள் 26வது சுதந்திர நாளை குதூகலத்துடன் கொண்டாடுகின்றனர்.

இந்திய சுதந்திரப் போராட்டத்தின் போது ஆங்காங்கே நடைபெற்ற சில வீரச் செயல்களை இக்கட்டுரையில் நினைவுபடுத்துகிறார் கவியோகி சுத்தானந்த பாரதியார்.

டில்லி செங்கோட்டை (1947) விடுதலைக் கொடி ஏறு முன்பே 1790-ல் சிவகங்கையில் விடுதலைக் கொடி வானளாவப் பறந்தது. முத்து வடுகநாதர் வீரப் போரில் தியாகப் பலியானார். அவரது பசுந்தலை முன் அரசி வேலு நாச்சியார், அவள் தந்தை கோலாகலத் தேவர் தம்பி வீரத் தேவன், படைத் தலைவர் பெரிய — சின்ன மருதர்—ஆகியோர் வீரதங் கொண்டு விடுதலைப் போர் நடத்தினர். 1858-ல் இராணி இலட்சுமிபாய் போர்க்களத்தில் இறந்தாள். இங்கே வேலுநாச்சியார் ஆங்கிலேயரை வென்று புரந்தாள். அவள் தம்பி வீரத்தேவன் துறவி வேடத்தில் வடக்கே சென்று பிரம்மாவர்த்தத்தில் 1857-ல் நானா சாகிப்பைத் தூண்டினான்.

ஃ ஃ

பாஞ்சாலங் குறிச்சியில் எட்டு மேஜர்களை வீழ்த்திக் கட்ட பொம்முவும் தூக்கு மேடை யேறினான். தூக்கு மேடை நாட்டை ஊக்கும் மேடையானது.

ஊமையன் ஒரே வாரத்தில் இடிந்த கோட்டையை வானளாவ எழுப்பிப் பாதர் வெள்ளை, நீலமேகம், சுப்பிரமணிய பிள்ளை போன்ற சூரரைக் கூட்டிப்போர் முடுக்கினான். முதற்போரில் ஆங்கிலேயர் கை ஓங்கியது. ஊமைத்துரை சிவகங்கைக்கு ஓடி வந்து, மருது இருவருடன் சேர்ந்து, திருமயத்தில் பாசறை அமைத்துக் காளையார் கோவில் காடுகளில் படையணி மறைத்துப் பாய்ந்து பாய்ந்து போர் புரிந்தான். மருதுசகோதரர் கடும் போர் புரிந்து தூக்கு மேடையில் இறவாப் புகழ் பெற்றனர் (1812).

நாற்பதாண்டுகள் ஓடி மறைந்தன. வடக்கே 1857-ல் தமிழ் நாட்டுப் பாபாஜீ (வீரத்தேவன்) தாந்தியாதோபே, ரானாசாகேபு, இலக்குமிபாய், கண்வார்சிங் அபிமுல்லாகான், அகம்மது மௌலி முதலியோரைத் தூண்டிப் போர்ப்புயல் வீசச் செய்தான். டில்லி பிடிபட்டது; ஆனால், துரோகிகள் காட்டிக் கொடுத்தனர். நீல்களும், ஹாவ்லக்குகளும் நமது வீரரைச் சுட்டுக்குவித்தனர்; ஆயிரக் கணக்கான மக்களைத் தூக்கு மேடையில் ஏற்றி வதைத்தனர். கிராமம் கிராமமாகத் தீ மூட்டி மக்களைத் தீயில் போட்டு மடித்தனர்.

ஃ ஃ

இக்கொடிய வெற்றியும், குமுறிய போரும் விக்டோரியா ஆட்சிக்குப் புதிய பாடம் கற்பித்தன. துப்பாக்கியாலும், சட்டத்தாலும் இந்த நாட்டு உரிமையுணர்வை அடக்க முடியாது நாட்டினரை அடக்க நாட்டினவரைக் கொண்டே ஓர் இயக்கம் தொடர்வோம்! என்ற சூழ்ச்சியால் ஹியும், வெட்டர் பார்ன் ஆகிய இருவரையும் ஊக்கிக்காங்கிரஸ் சங்கத்தை நாட்டினர். அதில் நீண்ட காலம் (1885—1912) சர்க்காரின் செல்லப் பிள்ளைகளே சலுகை பெற்றனர். முதல் காங்கிரஸ் பம்பாயில் கோகுல்தாஸ் வடமொழிக் கல்லூரியில் டபிள்யூ. சி. பானர்ஜி தலைமையில் நடந்தது. அதற்குத் தமிழ்நாட்டிலிருந்து மதுரை மணி ஐயர், சுதேசமித்திரன் ஜி. சு. மணி ஐயர், கேசவபிள்ளை ஆகியோர் சென்று பேசினர்.

ஃ ஃ

1907-ல் சூரத்தில் கோகலேயின் மிதவாதக் கூட்டம் நடந்தது. அதைத் திலகர், சிதம்பரம்பிள்ளை — பாரதியார் முதலிய தீவிரச் சுதேச வீரர்கள் செருப்பெறிந்து சிதறடித்தனர். அரவிந்தர் தலைமையில் முழு விடுதலை, சுதேச விரதத்துடன் நிறைவேறியது; மறு ஆண்டு அட்வகேட் — ஜெனரல் கிருஷ்ணசாமி ஐயர் செல்வாக்கால் சென்னையில் மிதவாதிகளின் கன்வென்ஷன் காங்கிரஸ் நடந்தது. அதை 'இந்தியா' இதழாசிரியர் பாரதியார் ஆட்டு மந்தைக் கூட்டம் என்று கேலி செய்து திலகர் — அரவிந்தர் இயக்கத்திற்கே ஆக்கமளித்தார். சென்னையில் அடக்கப்பட்ட 'இந்தியா' புதுவையில் மிடுக்கு நடைபோட்டது. அதையும் 1910-ஆம் ஆண்டு அடக்கியது ஆங்கில ஆட்சி.

## கவியோகி சுத்தானந்தபாரதி

ஃ ஃ

உடனே அரவிந்தரின் 'கர்மயோகி'யினைப் பாரதியார் தமிழில் நடத்தினார். தமிழகம் அரவிந்த மணம் கமழ்ந்தது. ஆள் தூக்கிச் சட்டம் இதோ தூரத்துகிறது பாரதியார் முயற்சியால் அரவிந்தர் கல்கத்தாவில் கப்பலேறி 4—4—1910ல் புதுச்சேரி புகுந்து முதலில் சங்கரஞ் செட்டியார் வீட்டு மாடியில் தவம் தொடங்கினார். பிறகு வெள்ளைக்காரத் தெரு மாளிகையில் குடியேறி நான்கு மாணவருடன் வசித்தார். 1910 முதல் 1950 வரையில், நாற்பதாண்டுகள் அரவிந்தர் தமிழகத்திற்கே உரியவராகி இங்கேயே உலகம் வியந்து போற்ற ஆசிரமமும், ஆரோவில்லும் அமைத்து அன்னையிடம் விடுத்து அமரரானார். அரவிந்தர் அரசியலை நீங்கி ஆன்ம நேய ஒருமைத் திறனால், இந்தியாவுக்கு உலகப் புகழ் தேடினார். அவர் கல்கத்தாவில் பிறந்தார்; இலண்டனில் கற்றார் பரோடாவில் கலை வளர்த்தார். கல்கத்தாவில் நான்கு ஆண்டுகள் எழுத்தாலும், பேச்சாலும் நாட்டை வீறுபடுத்தினார். இறுதியில் காந்தி கண்ட சாத்விக எதிர்ப்பும், ஒத்துழையாமையுமே வழி எனச் சொல்லி உள்ளடங்கியோகச் சக்தியை வளர்த்து மனிதன் தெய்வ மாறுதல் அடையும் ஆத்ம சாதனத்தைத் தந்து சென்றார். பாரதியாரும், அடியேனும், அரவிந்தர் திருவடி பற்றிப் புது வாழ்வெய்தினோம். எனது பாரத சக்தி அரவிந்தர் சக்தி வரலாறே, அதை அவர் ஆங்கில மொழி பெயர்ப்பில் படித்து ஆசி கூறினார்.

1910-ல் அரவிந்தர் வந்த சில மாதங்களுக்குப் பிறகு வீர விளக்கு வ.வே.சு. ஐயர் இடர்க்கடல்களை நீந்திப் பாரிசில் பார்சிகனவான் விக்ரமசிங் ஆகி, கெய்ரோவில் அப்துலலா மௌலவியாகிப் பம்பாயில் குலாம் காதராகி, நாசிக் சிறையில் சாவர்காரைக கண்டு, அவர் வந்தேமாதர ஆர்ப்புடன் அந்தமான் செல்வதைப் பார்த்துவிட்டு, நாகபுரி காங்கிரஸ் கண்டு, புதுச்சேரிக்குப் பக்கிரி வேடந்தாங்கி அல்லாஹ் அக்பர் என்று வந்தார். மண்டயம் ஆசாரியார் வீட்டில் ஒரு வாரம் தங்கிப் பிறகு கோயில் தெருவில் குடி புகுந்தார். மனைவி வரகநேரியிலிருந்து வந்து சேர்ந்தாள். புதுச்சேரியில் ஐயர் பட்ட இடர்கள் பிரதாபசிங்கன், கரிபால்டி ஆகிய வீரர் பட்ட இடர்களைப் போலும்.

ஐயர், கிருஷ்ண பிள்ளை தோட்டத்தில் வாஞ்சி மாடசாமி, நீலகண்டன், சங்கர கிருஷ்ணன் முதலியோருக்குத் துப்பாக்கிப் பயிற்சி தந்தார். அடியேனுக்கு மறவர் உறவால் போதிய வாட் பயிற்சியும், சுடு பயிற்சியும் கிடைத்தது. ஆதலால் என்னை ஐயர் மிகவும் விரும்பி இன்னொரு செயலுக்காகப் பயிற்றினார்.

மணியாச்சியில் கலெக்டர் ஆஷை வாஞ்சி சாம்பலாக்கினான். பிறகு ஐயருக்குப் பல இடர்கள் தொடர்ந்தன. என் உடல் பொருள் ஆவியெல்லாம் ஐயருக்காகவும், அரவிந்தருக்காகவும் அளித்தேன். ஐயரைத் தூக்கிச் செல்லவும் குளியப் வைத்துப் பித்தாக்கவும், மயக்கவும், மாயம் செய்யவும் ஒற்றர் செய்த வஞ்சனைகள் எண்ணில. நான் ஊச்சிக் குடுமி தாசரி வேடம் பூண்டு அவருக்கு உதவினேன். வீரன் மாடசாமியும், வேலைக்காரி பார்வதியும் ஐயருக்குச் செய்த உதவிகள் பல.

ஒரு நாள் ஒற்றர் ஐயர் வீட்டுக்கிணற்றில் வெடி மருந்துகள் அடங்கிய ஜாடியை வைத்தனர். பார்வதி கண்டுபிடித்தாள். ஐயர் ஜாடியைப் புதுவை கவர்னரிடம் காட்டி வரும்போது ஒற்றர் கிணற்றை இறைத்துப் பார்த்து ஏமாந்தனர். குண்டர்களுண்டு மற்றொரு தடவை இரவில் ஐயரைத் தூக்கிச் செல்லவே கூட்டமாக வந்தனர். ஐயர் தமது ஆயுதச் சாமான்களை மாடியேறி இன்னொரு வீட்டில் ஒளிய வைத்து, மனைவி மக்களையும் அங்கே அனுப்பித் துப்பாக்கி எடுத்து மேலேயிருந்து இரண்டு வேட்டுப் போட்டார். காலிகள் ஓடி மறைந்தனர்.

முதல் உலகப் போர் மூண்ட போது எம்டன் கப்பல் சென்னையில் குண்டு போட்டுப் புதுவைக்கு வந்தது. அதில் சண்பக இராமன் பிள்ளை இருந்தார். மாடசாமி படகில், இரவு பன்னிரண்டு மணிக்கு ஐயர் எனக்குக் 'கடிதம்' தந்து அனுப்பினார். சண்பக இராமர் பதில் தந்தார். 'புரட்சியைப் பலமாக நடத்தினால் கைசரின் உதவி வரும்' என்றார்.

இதன் பிறகு ஐயர், அரவிந்தர், பாரதி ஆகிய அனைவரையும் அல்ஜீரியாவுக்கு நாடு கடத்த முயன்றனர்; அரவிந்தர் நடக்காது என்றார், நடக்கவில்லை.

1917-ல் காந்தியடிகள் வந்தார். அவரது உபதேசத்தால் துப்பாக்கி வெறி ஒழிந்தது. ஐயருடன் எல்லாரும் காந்தியர் ஆனோம். போர் முடிந்ததும் அரசியல் கைதிகள் விடுதலை பெற்றனர். பாரதியார் பாய்ந்து வந்தார். சென்னைக்கு ஐயரும் வந்தார். பிறகு காந்தி வழி பற்றித் தொண்டு பரவினோம்.

அரவிந்த சக்தியால் புதுச்சேரி ஆன்ம நேய நிலையமானது. உலகெல்லாம் அங்கே கூடுகிறது. "வள்ளலார்" கண்ட கனவு வண்ணப் புதுவையில் ஆரோவில்லில் நிறைவேறுகிறது. இந்திய விடுதலைப் போரின் தியாகப் பாசறை புதுச்சேரி; அது புதுயுகச் சேரியாகி உலகச் சங்க நிலையமாக நிலவுகிறது.

காந்தீயத்திற்கும் கனிந்துதவியது தமிழகமே. வடக்கே தண்டியாத்திரை போல இங்கே வேதாரண்ய உப்புச் சத்தியாகிரகம் நடந்தது. அங்கே சபர்மதி ஆசிரமம், இங்கே நான்கு காந்தி ஆசிரமங்கள் எழுந்து விளங்குகின்றன.

இந்தியச் சுதந்திரப் போரில் 1790 முதல் இன்று வரையில் தமிழர் ஈடுபட்டுப் பாடுபட்டனர்.

இந்தப் போர்களுக்கிடையே பெரியார், அண்ணா நடத்திய தன்மானப் போர் வரிசைகளை நாம் மறக்க முடியாது.

## ஈழநாட்டின் இதய கீதம்

—திருமலை சுந்தர்

என் உயிரான தமிழ் ஈழமே,
உனக்கே என்னுயிரை தந்துவிட்டேன்!
எனது இயக்கமெல்லாம் உனக்காகவே
நீ இன்றேல் என்னால் வாழவே முடியாது
உன்னை மூடி மறைக்கும் நீல வானும்
குளிப்பாட்டும் பெருமழையும்—காற்றும்
இயற்கையின் இடியும் மின்னலும்
என்னை சாகவிடாது தடுக்கிறதே!

மார்கழி மாதத்தில் பூத்துக் குலுங்காது (?)
சில திங்கள் கழிய வந்திடும்—உன்
பலாப்பழச் சுவையும்—மாங்கனியும்
என்னை உன்பால் இழுக்கிறது.

கோடை மாரியாய்—பெரு சிறு போகமாய்
செழித்து வளர்ந்துள்ள பசும் வயல்கள்—உன்
முகத்தின் சிங்கார புன்னகையாய் தெரிகின்றது.

ஆகா, என்ன அற்புத ஒளி! என்ன இதமான நிழல்!
அன்னையே, உன் முன்றானை தான் என்ன அழகு.

நதி, குளங்களின் கரைகள் தோறும்
ஆல், அரசு, மதுர ஆலவட்டங்களை விரித்தாய்
தென்றல்—வாடையுடன் நான் மகிழ
நீ தந்த வரமல்லவோ இவை?

அன்னையே!
உன் முகம் மகிழ்வற்று வாடினால்
என் கண்களில் கண்ணீர் முட்டி நிரம்புகிறது
உன் வாயினின்று உதிரும்—சொற்களுக்காக
நான் தவமிருக்கின்றேன்.
உன்னால்தான் என் வீடும் உருவானது
எனது இளமையும் இங்குதான்
உன் மண் என் மேனியில் படவே
உனக்காகவே உழைக்கின்றேன்.

உன் மேனியில் படர்ந்துள்ள—வளமுள்ள
இயற்கை செல்வங்கள் எனக்காகத்தான்
நேற்று வந்தவர் அதை தட்டிக் கேட்டு
உரிமை கொண்டாட உனது மகன்
நான் பேசாது இருப்பதா?
சொல்... அன்னையே...வாய் திறந்து சொல்

என் வாழ்நாளை
இயற்கைத் துறையிலும்— வயல் வெளியிலும்
மலையிலும்—நிலத்திலும்—கடலிலும்
உன் வளமெண்ணி ஈந்திருக்கிறேன்—
உனக்கு நான் உரிமையுடையவனே!

என் அன்னையே...என்னைப் போல்
என் சகோதரர்கள்
உனக்காகத்தான் பாடுபடுகிறார்கள்
உன்னைத்தான் நேசிக்கிறார்கள்

உன்னை நாம் வணங்குகின்றோம்
உனக்காகவே வாழுகின்றோம்

உன்னை அலங்கரிக்க எண்ணி
மாற்றார் செல்வக் குவியலில்
மயங்கி விழுந்து
உன்னை தவிக்க விட்டு
வாழவே மாட்டோம்
இது உறுதி.
நீயே நாம்
நாமே நீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழா!

'பிரச்சினைகள் எதுவும் இல்லாத காரணத்தினுல்தான் பிரிவினைக் கோஷத்தை எழுப்புகின்றனர். பிரிவினை செய்ய விரும்புகின்றவர்கள், ஏகாதிபத்திய வாதிகளுக்கு வால்பிடித்து வாழ விரும்புகின்றவர்கள். இனவெறி யூட்டுபவர்கள் எங்கிருந்தாலும் சரி இந்த அரசு அவர்களுக்கு எதிராகக் கடுமையாகச் செயல்படும்'

—உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் ரி. பி. இலங்கரத்தின, (சுடுநாடு 25-7-73)

—தமிழா, சிரி. நன்ருகச் சிரி. உனக்குப் பிரச்சினைகள் எதுவுமே இல்லையாம். தர்மம் பேசும் அரசின் அமைச்சரின் அரியதொரு கண்டு பிடிப்பையிட்டு நன்ருகச் சிரி?

தமிழா, உன் மொழிக்குச் சம அந்தஸ்து கிடைத்து விட்டதா? உன் தமிழ்ப் பிரதேசம் சிங்களக் குடியேற்றத்தால் சூறையாடப்படும் நிலைமை மாறி விட்டதா? பௌத்தமதத்திற்கு அரசியலமைப்பில் அளிக்கப்பட்டுள்ள பாதுகாப்பினைப் போல, அந்தஸ்துப் போல உன் மதங்களுக்கும் அரசமைப்பில் பாதுகாப்பு அளிக்கப் பட்டுள்ளதா? உன் குழந்தைகள் தமிழிலேயே கல்வி கற்றுப் பின்னர் அரசாங்க உத்தியோகம் கிடைத்தகாலை சிங்களம் படிக்க வேண்டிய இழி நிலை மாறி விட்டதா? தமிழ்ப்பிள்ளைகளின் தொண்டைக்குள் சிங்களம் போதனுமொழியாகத் திணிக்கப்படும் ஆபத்து நிலை நீங்கி விட்டதா? காணியில்லாத உன் இனத்தவர்கள் அரசுக் காணியில் குடியேறினுல், படைபலம் கொண்டு அவர்களை விரட்டியடிக்கத் தயாரிக்கப்பட்ட சட்டம் கிழிக்கப்பட்டு விட்டதா? பதவி உயர்வுக்கும், சம்பள உயர்வுக்கும், கிடைத்த பதவியையே பாதுகாக்கவும் சிங்களம் படிக்கவேண்டிய வெட்கம் கெட்ட நிலைமையில் ஏதாவது மாற்றம் செய்யப்பட்டுள்ளதா? சிங்களவர் தம்மைச் சிங்களத்தில் ஆளுகின்றனர். அது போலத் தமிழா நீ உன்னைத் தமிழில் ஆளும் நிலையைப் பெற்று விட்டாயா?

'சிங்கள பௌத்தர்' என்னும் திறமையைக் கணித்து அரசியல் உயர்பதவிகள் வழங்கும் நிலை மாறிவிட்டதா? பல்கலைக்கழகத்திற்கு அனுமதிபெறுதற்குச் சிங்கள மாணவர்களிலும் பார்க்கத் தமிழ் மாணவர்கள் அதிக புள்ளிகள் பெறவேண்டும் என்னும் நிலைமாறித் தமிழ் மாணவர், சிங்கள மாணவர் எனப் பேதம் பாராது திறமையைக் கணித்துப் பல்கலைக்கழக அனுமதி வழங்கும் நிலை ஏற்பட்டுள்ளதா?

இந்தப் பிரச்சினைகள் உனது கழுத்தை நெரிக்கும் போது இந்த அமைச்சரும், அவரது அரசும், அந்த அரசின் அடிகழுவிக் குடித்து வாழும் சில தமிழர்களும், உன் இனத்திற்குப் பிரச்சினைகளே இல்லை என்று பிதற்றுகிருர்கள்;

சிங்களவரி எதனைக் கூறினுலும் அது தேசியவாதமாகக் கொள்ளுகிருர்கள். ஆனுல் தமிழனுகிய நீ உன் அடிப்படை உரிமைகள்பற்றிப் பேசிடினும் அது வகுப்புவாதம் என்றும் இனவெறி என்றும் பிரிவினைவாதிகளென்றும், சகோதரத்துவம் பற்றிப் பேசும் இந்த அமைச்சர் பேசுகிருர். எப்படி இருக்கிறது இவரது சமதர்மம்?

இப்படியான சிங்கள ஆட்சியாளருடன்தான் நீ இன்னமும் இணைந்து வாழ வேண்டுமா?

சுதந்திரத்திற்குப் போராடியபோது, ஜின்னா பாக்கிஸ்தானைப் பெற்றதுபோல எமது தமிழ்த் தலைவர்களும் சங்கிலி மன்னன் ஆண்ட தமிழ் அரசைப் பெற்றிருந்தால் தமிழா, உனக்கு இந்த இழிவு, அடிமை வாழ்வு ஏற்பட்டிருக்குமா?

தமிழா சிந்தியடா, சிந்தி:

* * *

'தியாகி கந்தசாமியுடன் உழைத்தவன் நான்'

விமான நிலையத்தில்?
—ரி. பி. இலங்கரத்தின (ஈழநாடு 25-7-73)

—சிங்கள மக்களின் மத்தியில் இதைச் சொல்லத் துணிவில்லை இவருக்கு.

தியாகி கந்தசாமி பிறந்த தமிழ் இனத்தவருக்கும், அவர் பேசி மகிழ்ந்த தேன் மொழியாம் தமிழ் மொழிக்கும் சம உரிமை தந்திட இவருக்கும் இவரது அரசுக்கும் மனமில்லை.

தியாகி கந்தசாமிக்கு அமைக்கப்பட்ட சிலையைத் தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது. அதனைப் பற்றி எதுவும் பேசிடவோ செய்திடவோ முடியவில்லை, இவருக்கு.

இங்கு வந்து தமிழ் மக்களுக்கு கதை அளக்கிருர், இந்த அமைச்சர்.

* * *

# சிந்தியடா!

'சமதர்ம சமுதாயம் காண அரசாங்கத்துடன் ஒத்துழைக்குமாறு வடபகுதி மக்களுக்கு வர்த்தக மந்திரி அழைப்பு- பலாலியில் அமோக வரவேற்பு'

—வீரகேசரி 25-7-73

—சிங்களம் ஆளும் மொழி தமிழ் அழிக்கப்படும் மொழி இதுதானு இவரது சமதர்மம்? பௌத்தம், அரசு மதம் மற்றய மதங்களுக்கு அரசின் பாதுகாப்பில்லை. இதுதானு இவர் காணத்துடிக்கும் சமதர்மம்?

வடக்குக் கிழக்கில் வாழும் காணியற்ற தமிழன் அரசுக் காணியினைப் பிடித்தால் சட்ட நடவடிக்கை ஆனுல் சிங்களர் அரசு நிலத்தில் எதுவும் செய்யலாம். இது தானு இவர் கூறும் சமதர்மம்.

சிங்களச் சிறுர்களுக்குத் தாய்மொழியாம் சிங்களம் போதனுமொழி தமிழ்ச் சிறுர்களுக்கு அவர்களது தாய்மொழியாம்தமிழ்மொழியை போதனுமொழியாக் கிட மறுத்தும் சிங்களமொழியைத் தொண்டைக்குள் திணித்துமா இவரது அரசு சமதர்ம சமுதாயத்தினை நிறுவப் போகிறது? இந்தப் போலிச் சமதர்மம் தமிழ் மக்களுக்கு வேண்டவே வேண்டாம்.

'உலகில் வடக்கு வியட்னும் தெற்கு வியட்னும் என்றும் வடகொரியா தென்கொரியா என்றும் கிழக்கு ஜெர்மனி மேற்கு ஜெர்மனி என்றும் பிளவுபட்டிருக்கின்றன. இதற்கெல்லாம் ஏகாதிபத்திய வாதிகள் தான் காரணமாகும். இந்தியா பாக்கிஸ்தான் பிரிவினை ஏற்பட்டதற்கும் ஏகாதிபத்திய வாதிகள் தான் காரணம் என நான் நம்புகிறேன். திரும்பவும் பங்களாதேஷ் பிரிந்திருக்கிறது. இந்த நாட்டையும் பிரிவினை செய்ய விரும்புகிறவர்கள் ஏகாதிபத்திய வாதிகளுக்கு வால் பிடித்து வாழ விரும்புகின்றவர்களேயாகும்.'

—ரி. பி. இலங்கரத்தின (ஈழநாடு 25-7-73)

—தமிழ் மக்களின் அடிப்படை ஜனநாயக உரிமைகளை வழங்கிச் சிங்களருடன் தமிழரும் சரிநிகர் சமானமாக தன்மானத்துடன் வாழ வைக்கவும் இந்த அமைச்சர் அங்கம் வகிக்கும் அரசுக்கு மனமில்லை;

தமிழ் மக்கள் பிரிந்து சென்று தனியரசு நிறுவித் தன்மானத்துடன் தமிழினத்தின் தனித்துவத்தைக் காப்பாற்றி வாழவிடவும் இவர்களுக்கு மனம் பொறுக்கவில்லை?

# சிந்தி!!

தமிழ் மக்கள் தமது உரிமைகளையும் இழந்து சிங்களவருக்கு அடிமைப்பட்டு வாழவேண்டும் என்பதுதான் இவர்களது உள்ளார்ந்த எண்ணம். இதுதான் இந்த அமைச்சரினது சமதர்மம் போலும்.

இவரது கூற்றுப்படி பங்களாதேஷ் பிரிந்திட உதவிய இந்தியாவும், ருஷியாவும், பாக்கிஸ்தான் உருவாக உழைத்த ஜின்னாவும்கூட ஏகாதிபத்தியவாதிகள் அல்லவா?

சிங்கள மக்களும் வாழட்டும். தமிழ் மக்களையும் வாழ விட்டடும். இன்றேல் தமிழ் மக்கள் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை என்பதனை இந்த அமைச்சர் அறிந்து கொள்ளட்டும்.

—'சித்தன்'

## இவ்வாரத் தமாஷ்

''எனது 35 வருட அரசியல் வாழ்வில் நான் ஒருபோதும் மந்திரிப் பதவிக்கு ஆசைப்பட்டது கிடையாது.

—கரணவாய் தெற்கு கூட்டத்தில் சமூகசேவை மந்திரி டி. பி. தென்னக்கோன்.

# ஆளுங்கட்சி அடிவருடிகளுக்கு குப்பிழான் இளைஞர்கள் சார்பில் ஓரு சவால்!

20-7-73ல் வெளிவந்த ஆளுங்கட்சி அடிவருடிகளின் பத்திரிகை யொன்றில் குப்பிழான் மக்களினை — குறிப்பாக இளைஞர்களை மடையர்கள் என்றெண்ணி ஒரு செய்தியை வெளியிட்டுள்ளது.

மே 22இல் குப்பிழானில் தமிழர் கூட்டணியின் எழுச்சிச் சின்னமான உதய சூரியன்கொடி குப்பிழான் சனசமூக நிலையத்தில் ஏற்றி வைக்கப்பட்டது இவ்வூரில் உள்ள ஒவ்வொரு பிரஜையும் அறிந்த பகிரங்க உண்மை.

அரசாங்கத்தின் உதவியில் உருவாகியதல்ல சனசமூக நிலையம். குப்பிழான் குடிமகன் ஒவ்வொருவரதும் உதவியினுல் உருவாகி இன்று இளைஞர்களின் தனித் திறமையால் செயல்பட்டு வருவது எமது சனசமூக நிலையம்! அந்த நிலையத்தின் நிர்வாகிகளின் ஏகமனதான வேண்டுகோள்படியே அன்றைய தினம் உடுவில் பிரதிநிதியினுல் திரு. மு. ஆலாலசுந்தரம் சகிதம், வாழை, மாவிலை, தோரணங்களால் அலங்கரிக்கப்பட்ட முன்றிலில் ஏற்றிவைக்கப்பட்டது உதயசூரியன்கொடி!

குப்பிழான் மக்கள் எதிர்த்தாலல்லவோ காதோடு காதாக, கொடியேற்ற வேண்டும்! குப்பிழானுக்கு அர்த்த இராத்திரி வேளைகளில் சுதந்திரக்கட்சியிலுள்ள ஒரு விநோதப்பிறவி வந்து தனது தாசர்களான இரண்டோ மூன்றோபேர்வழிகளோடு கதைத்து விட்டுப் போவது மாதிரியல்ல இக்கொடியேற்று வைபவம் நடந்தது என்பதை மறக்க வேண்டாம் — ஆளுங்கட்சியின் இந்த ஊதுகுழல்!

ஆனுல் இரவோடிரவாக யாரையோ பிடித்து அரசியல் திரு 'நடனம்' புரிவதில் கைதேர்ந்தவரான ஒருவர் கொடியை அறுத்துக் கொண்டுபோய் விட்டார் என்பதை நாம் மறுக்கவில்லை.

ஆனுல் மறுநாள் கூட்டணி இளைஞர்கள் 'கொடி எங்[illegible] அதைக் களவாடியவர்கள், இரவிரவாக அபகரித்தவர்கள் ஏன் எமக்கெதிரே அதைச் செய்திருக்கலாமே என்று கேட்டனர் என்பதும் உண்மை!

ஆனுல் எந்தவொரு வினோதனின் அடிநக்கி வாழும் இரண்டு, மூன்று பேர்வழிகளில் எவராவது 'நாங்கள் தான் அறுத்தோம். எங்கள் கிளையை இரவிராக எரித்தீர்களே அதே மாதிரி நாமும் செய்தோம்' என்று கூறவே இல்லை. எமக்கு இன்றுவரை சந்தேகம் இருந்தது கொடியை அறுப்பித்தவர் யாரென்று? இப்போதான் வெளிச்சத்துக்கு வந்திருக்கிருர் அந்தப் பருத்த சடலம்!

குப்பிழானில் இருந்த— பொலிசார் மத்தியில் திறக்கப்பட்ட ஸ்ரீ லங்கா சு. கட்சிக்கிளை எரிக்கப்பட்ட சம்பவம் நடந்தது இந்த நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாதிகள் கலகம் ஆரம்பமாக ஒரு மாதத்துக்கு முன்! சென்றவருடம் நடந்தது அல்ல!

ஆனுல் அக்கிளையை எரித்தவர்கள் என்று கூறி யார் யாரையோ ஊர்ப்பெரியவர்களையும் — இளைஞர்களையும் துரோகிகள் பொலிஸில் கொண்டு சென்றனர். ஆனுல் எதுவும் செய்யமுடியவில்லை. ஏன் முடிந்திருந்தால் —குற்றம் உண்மையென்ருல் வழக்குத்தொடரவில்லை; அன்றிலிருந்து அந்த ஸ்ரீ. ல. சு. கட்சிக்கிளையில் இருந்த அனைவருமே வெளியேறிவிட்டனர். இரண்டோ, மூன்றைத் தவிர!

இதன்பின் ஒருமுறை திரு. வினோதன் எரிந்த கிளைக்கு புனருத்தாரணம் செய்ய வந்து இளைஞர்களிடம் பட்ட பாட்டை ஏற்கனவே 'சுதந்திரனில்' நாம் அம்பலப்படுத்தியிருந்தோம்.

ஆனுல் குப்பிழான் வாசிகள் கூறு[illegible] — அனு[illegible] [illegible] ல. சு. கட்சிக்கிளை எரிந்தது பற்றி! இப்படிச்சொல்ல கொஞ்சமாவது வெட்கம், ரோசம், மானம் எதுவுமே இல்லையா? ஏன் இந்த செய்திவந்த கழிசடை ஏட்டை எமது ச. சமூக நிலையத்தில் போட்டிருக்கலாமே? அந்தச்செய்தியை தந்த 'மணி'க்கு ஏன் அந்தத் துணிவில்லை?

கொடி அறுக்கப்பட்டது தான் மறுநாள் விடிய மீண்டும் கொடி ஏற்றப்பட்டு— கம்பீரமாக பறந்தது என்பது அனைவருக்கும் தெரியும்.

திரு. விநோதனுக்கு, குப்பிழான், இரண்டு, மூன்று அடிமைகளுக்கும் ஒரு சவால் விடுகிறோம். துணிவிருந்தால், திராணியிருந்தால், முதுகெலும்பிருந்தால் எங்கள் சவாலை ஏற்பீர்கள் என்ற நம்பிக்கை உண்டு! ஆனுல் அவைகள் தான் கிடையாதே உங்களிடம்!

'குப்பிழான் மக்கள் உங்கள் பக்கம் என்று நீங்கள் சொல்வது உண்மையென்ருல், விநோதன் உட்பட ஆளுங்கட்சியின் அடிவருடிகள் எவராவது எங்கள் கிராமத்துக்கு, அரசாங்கக் கூலிப்படைகளின் உதவியின்றி வருவீர்கள் என்ருல் —அன்றே குப்பிழான் மக்களின் நிலையை நாம் தெளிவாக்குவோம்! ஒளிந்து மறைந்து, இரவிரவாக வராது பகலிலே நேர்மையாக, வருகிறேன் குப்பிழானுக்கு என்று சொல்லிவிட்டு வரட்டுக்கும் ஆண்கள், பெண்கள், குழந்தைகள் உட்பட முழுக் குப்பிழானுமே, எமது கிராம மண்ணில் அடியெடுத்து வைக்க விடாது துரோகிகளான உங்களை விரட்டியடிக்குதா! இல்லையா! என்பதைப்பார்க்கலாம். அதைவிட்டு குப்பிழான் மக்களை அடிமைகள் என்று மற்றவர்களுக்கு காட்ட முற்படவேண்டாம்.

—தேவன், குப்பிழான்.

## விடுதலைவீரர்க்கோர் விழிப்பு மருந்து!

அரசின் ஊதுகுழலான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சோம்பல் சோசலிச நிகழ்ச்சிகளைக்கேட்டுச் சலிப்படையும் விடுதலை வீரர்க்கு விறுவிறுப்பான நிகழ்ச்சியொன்றைத் திருச்சி வானெலி தயாரித்து அளித்து வருகிறது.

இரவு 8 மணியளவில் ஒலிபரப்பாகும் 'விடுதலை வீரர்களுடன் பேட்டி' என்ற நிகழ்ச்சி கோழையையும் வீரனுக்கி விழிப்படையச் செய்யும் விடுதலை வேட்கை நிறைந்த பாடல்களுடன் இந்தியச் சுதந்திரப் போராட்ட வீரர்களின் தியாக வரலாற்றை பேட்டிமூலம் கேட்கும் போது உடலெல்லாம் புல்லரிக்கும்! உள்ளமெல்லாம் கொந்தளிக்கும்! வீறுகொண்ட நரம்புகள் விம்மிப் புடைக்கும்! இன்றே ஈழத்தமிழகத்தில் சுதந்திரத்தாயின் மணிக்கொடியைப் பறக்கவிடமாட்டேனு என்ற உணர்ச்சிக்கொந்தளிப்பு ஏற்படும்.

இந்த விறுவிறுப்பான நிகழ்ச்சியை ஒவ்வொரு ஈழத்தமிழனும் கேட்டு விடுதலை உணர்ச்சி கொள்ளவேண்டும். இந்நிகழ்ச்சி உரிமைக்குப் போராடும் ஈழத் தமிழர்க்கு நல்லதோர் விழிப்பு மருந்தாகும். இதுவரை தவறியவர்கள் இனிமேலும் தவறவிடாதீர்கள்.

—காங்கைவேலன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்ட தமிழ் பரம்பரை மீண்டும் ஆட்சி அமைத்தே தீரும்!

## உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தனின் கூற்று ஒருபோதுமே பொய்க்காது!

## குப்பிழான் கூட்டத்தில் நாவலர் வீரவுரை!

"இன்று நான் இந்தக் கருத்தரங்கில் உரையாற்ற வந்தபோது 'புயல்' பத்திரிகையில் வெளிவந்த ஒரு செய்தியைப்பற்றிச் சொல்லி அதை அனுப்பியவரைப் பற்றியும் கவலைப்பட்டனர் இங்குள்ள வாலிபர்கள் சிலர். ஆனால் இவற்றை யெல்லாம் இட்டு கவலைப்படவோ, ஆத்திரப்படவோ தேவையில்லை! ஏனெனில் தமிழரின் வரலாற்றை எடுத்துப் பார்த்தாலே காலத்துக்குக் காலம் துரோகிகளும், சுயநலவாதிகளும் நிறையப் பேர் இருந்திருக்கின்றனர். ஒருகட்டப் பொம்மனைக் காட்டிக் கொடுக்க எட்டப்பனும், ஒரு பண்டாரவன்னியனைக் காட்டிக் கொடுக்க ஒரு காக்கை வன்னியனும் வாழ்ந்தே வந்துள்ளனர். அது மட்டுமல்ல இன்று சுதந்திரமடைந்து — தனிக் கௌரவத்துடன் வாழும் நாடுகள் — இவைகூட தமது போராட்டகாலத்திலே எத்தனையோ காட்டிக் கொடுப்பவர்களைக் கண்டிருக்கிறது. ஏன் அண்மையில் விடுதலை பெற்ற வங்காள தேசத்தில் கூட முஜிபுருக்கு எதிராக துரோகிகள் காட்டிக்கொடுத்தே வாழ்ந்து — இன்று மரணதண்டனை அனுபவிக்கின்ற நிலைக்கு வந்துள்ளனர். ஆகவே எமது தமிழ் நாடு உருவாகின்ற வேளையிலே இப்படியான துரோகிகளையும் — எட்டப்பர்களையும் கவனிப்போம்! அதுவரை அமைதியாக — ஆத்திரத்தை அடக்கி வாழ்வோம்!"

— இவ்வாறு "இன்றைய நிலையில் தமிழர் கடமை" என்னும் தலைப்பிலே குப்பிழானில் நடந்த அரசியல் கருத்தரங் கொன்றில் உரையாற்றிய நாவலர் அ. அமிர்தலிங்கம் குறிப்பிட்டார். திரு. ச. பரமகுருநாதன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் பெருந்திரளான இளைஞர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் மத்தியில் உரையாற்றிய 'அமிர்' மேலும் பேசியதாவது:—

### மார்க்சியவாதி ஏற்பானா?

"பழம் பெருமை மிக்க கோணேசர் ஆலயத்தை பௌத்த புனித நகராக்குமாறு அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் கேட்டுள்ளது. சம்பந்தரும்-நாவுக்கரசரும் தேவாரம் பாடி மகிழ்ந்த தலத்தை இன்று "கோகர்ண" விகாரையாக்க முயற்சி நடக்கிறது. சுந்தரபாண்டியனது "மீன்" சின்னம் கோணேசர் கோட்டை வாசலில் பதிக்கப்பட்டிருப்பது எதைக்காட்டுகிறது? தமிழும், சைவமும் எவ்வளவு பெருமையுடன் அந்த நகரில் தலைநிமிர்ந்து வாழ்ந்தது என்பதைக் காட்டுகிறது! சைவத்தை, பௌத்த மதத்துக்குள் அடக்கும் அரசியல் திட்டத்தை ஏற்றுக்கொண்ட குமாரசூரியர், பொலிசார் உதவியுடன் கோவில்களிலே பிரதிட்டைசெய்துகொண்டு சைவத்தை அழியவிடோம் என்று கத்தினால் மட்டும் சைவம் வளர்ந்துவிடுமா? சமதர்மம், மார்க்ஸிஸம் தெரிந்த எவனாவது சிறுபான்மையினருக்கு மத உரிமையற்ற இந்த அரசியல் திட்டத்தை ஏற்பானா?

### நீதிமன்றமும் தமிழும்!

நீதிமன்றங்களிலே தமிழுக்கு உரிய இடத்தைப் பெற்றுக்கொடுத்து விட்டோம் என்று அருளம்பலமும், தியாகராஜாவும் துள்ளிக்குதிக்கின்றனர். எங்கே தமிழுக்கு இடம்! ஒரே ஒரு உதாரணத்தின் மூலம் தமிழுக்கு உரிமையில்லை நீதிமன்றத்திலும் என்பதை நான் நிரூபிக்க முடியும்.

'புதிய அரசு 70-ம் ஆண்டிலே பதவியேற்ற வேளையில் யூ.என்.பியின் ஆதரவாளர்களது வீடுகள், கடைகள் என்பன வெல்லாம் உடைக்கப்பட்டன. இந்த வேளையில் கேகாலையில் நகைக்கடை வைத்திருந்த ஒரு தமிழரது கடையும் தாக்கப்பட்டது. கொள்ளையடிக்கப்பட்டது. இதன் காரணமாக ஒரு வழக்கை அந்தத் தமிழர் கேகாலை நீதிமன்றில் தொடர்ந்தார். எதிரிகள் சார்பில் ஓர் சிங்கள வழக்குரைஞர் வாதாடினார். அப்போது இந்தத் தமிழர் சாட்சிக் கூண்டில் ஏறி தனக்கு சாட்சி சொல்லக்கூடியளவுக்கு சிங்களம் தெரியாதென்றும் தான் தமிழில் சாட்சியம் அளிக்கப் போவதாகவும் சொன்னார். அப்போது நீதிபதியாக கடமையாற்றிய சிங்களவர், சாட்சியைப்பார்த்து "22வருடங்களாக சிங்களம் பேசித்தானே இவ்வளவு பணத்தையும் உழைத்தீர். ஆகவே சிங்களத்தில்தான் சாட்சியம் அளிக்கும்படி தூண்டினார். ஒன்றும் செய்ய முடியாத நிலையில் அவர் உடன்பட்டார். இந்தத் தருணத்தைத் தனக்குச் சாதகமாக்கிக் கொண்ட எதிரி தரப்பு வழக்கறிஞர் மிகவும் கடுமையான சிங்கள சொற்களைப் பாவித்துக் கேள்விகள் கேட்டார். சாட்சியினால் பதில் அளிக்க முடியாமல் முன்னுக்குப் பின் முரணாகசாட்சியமளித்தார். முதல் தவணையிலேயே வழக்குத் தள்ளுபடியாயிற்று! எங்கே தமிழனுக்கு நீதி கிடைக்கிறது. பதில் சொல்லுவார்களா அருளம்பலமும், தியாகராஜாவும்!



'தமிழர் ஒருவர் கீழ்க்கோர்ட்டில் தனக்களிக்கப்பட்ட தீர்ப்பை ஆட்சேபித்து சுப்பிரீம் கோர்ட்டிற்கு மனுப்பண்ணினால், கீழ்க்கோர்ட்டில் உள்ள மொழிபெயர்க்கப்பட்ட சிங்கள கொப்பியைப் பார்த்தே — தீர்ப்பு கிடைக்கும்! மொழி பெயர்த்தவர் எதைமொழிபெயர்த்து எழுதினாலும் சரி. இந்த மொழி பெயர்ப்பினால் சுப்பிரீம் கோர்ட்டுக்கு மனுச்செய்தவருக்கு சரியான தீர்ப்புக் கிடைக்க முடியுமா?

### பாரபட்சம்

இன்று சிங்களவன் ஒருவன் காடொன்றை வெட்டித் திருத்திக் குடியேறினால் அது அவனுக்குச் சொந்தம். ஆனால் தமிழன் அப்படிச் செய்தால் அவனுக்குத் தண்டனை வழங்கச் சட்டம். இதனால்தான் புளையில் குடியேறிய சுமார் 400 குடும்பங்கள் அனாதரவான நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளது. பொலனறுவ மாவட்டத்தின் 66வது மைல் வரை — சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் இடங்களுக்கு ஒரு சட்டம்! ஆனால் 67 மைலில் இருந்து தமிழர் குடியேறும் இடங்களுக்குஒரு சட்டம்! இதுவும் ஒரு சமதர்ம ஆட்சியா? உலகில் எங்கே இப்படியான அநியாயம் நடக்கிறது.

2500 பொலிசாரை, சென்ற வருடம் புதிதாக தெரிவு செய்தார்கள். இலங்கையில் தமிழர் 22விதம்—அதன்படி பார்த்தால் 500 பேராவது தமிழராக பொலிசார் தெரிவாகியிருக்க வேண்டும். ஆனால்தெரிவாகியதே 126 பேர்தான். இப்படிப் பார்த்தால் முழுச்சனத்தொகையில் 5.1. தான் தமிழர் என்ற நிலையில் அல்லவா உண்டு.

### நான்குக்கு ஒன்று

'விவசாயப் பகுதியிலேயுள்ள மதிப்பீட்டுப் பகுதிக்கு பொருளாதார ஆலோசகர்களை தெரிவுசெய்துவருகிறார்கள். 18 சிங்களமாவட்டத்துக்கும் பட்டதாரிகள் தெரிவாகினர். தமிழ்ப்பகுதிகளுக்கு தேவையான உத்தியோகத்தர்களையும் எடுப்போம்-ஆனால் விளம்பரம் தேவையில்லை என்றார்-அதற்குப் பொறுப்பாகவுள்ள— ஜினேந்திரதாசா என்ற சிங்கள அதிகாரி. ஆனால் நேர்முகப் பரீட்சையில் 1 தமிழருக்கு 4 சிங்களவர் என்ற விகிதப்படி தெரிவாகினர். இன்று தமிழ்ப் பகுதிகளினும் புள்ளி விபரங்களை எடுக்க பதவியில் அமர்த்தப்பட்டவர்கள் சிங்களவரே. இவர்களுக்கு தமிழே தெரியாது. சும்மா சம்பளத்தை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள்.

திரு. குமாரசூரியர் இன்று பெரிதாக தமிழுக்காக தான் வாதாடுவதாக கூறுகிறார். ஆனால் உதவித் தபால் மா அதிபராக இருந்த நாகலிங்கம் என்பவர் தனக்குப்பதவி உயர்வு கிடைக்கும் என்று தமிழ் அமைச்சர், பொறுப்பாகவுள்ள அமைச்சிடம் எதிர்பார்த்தார். ஆனால் அப்பதவியைப்பெற்றவரோ ஒரு சிங்களவர். கேவலம்ஒரு தமிழ் அமைச்சர், ஒரு தமிழனுக்குப் பதவி உயர்வளிக்க முடியாமல் இருக்கிறாரே! வெட்கப்படவேண்டிய விஷயம் இது.

### புத்தூரில் புற்றுநோய்

புத்தூரில் தமிழ்ச்சிறார்களுக்கு சிங்களம் படிப்பிப்பதையிட்டு ஒரு போட்டிப் பாடசாலையை உருவாக்கினோம். இப்பாடசாலையை நாம் சிறிது காலம் நடாத்தினால் கலைத்துவிடுவோம் என்றெண்ணி அரசு பாராமுகமாயிருக்கிறது. ஆனால் இறுதி மட்டும் அப்பாடசாலையை நாம் நடத்தியே தீருவோம். மீண்டும் சிங்களத்தை அங்கு நுழைய அனுமதிக்கமாட்டோம் டாக்டர் நந்தி குறிப்பிட்டதுபோல் 'புத்தூரில்-புற்று நோய்' மாறும் வரை நாம் ஓயமாட்டோம்.

1956ம் ஆண்டிலிருந்து [illegible] சிங்களத்தை [illegible] மல்போராடி வருகிறோமோ. தொடர்ந்து அப்படியே எமது போராட்டம் அமையும்.

எப்போது மலையகத்தமிழன் -வடக்குக்கிழக்குடன் சேர வேண்டும் என்று உணரத் தொடங்கினானோ— வடக்குக் கிழக்கில் சென்று குடியேற வேண்டும் என்று விரும்பினானோ, அன்றே 'ஈழத்தமிழகம்' சிங்களத்தினின்றும் பிரிவுபட்டுவிட்டது.

18 கிளைகளை தாம் அமைத்துவிட்டதாக திரு. அருளம்பலம் கூவுகிறார். ஆனால் ஈழத்தமிழ்நாடு வங்காளம் போல் மாறும் வேளையில் இவர்கள் எத்தனை கிளைகளை அமைப்பார்களோ தெரியாது.

'ஈழத்தமிழர் சரித்திரத்தில் முதல் தடவையாக தம்பி காசி ஆனந்தனும் மற்றும் இளைஞர்களும் சிறைக் கைதிகளாக்கப்பட்டு வருடக்கணக்கில் சிறை இருந்து வருகிறார்கள்.

காசி ஆனந்தன் சொல்லுவார் "ஆண்டபரம்பரை நாம்" என்று. அந்த கவிஞனின் கூற்று என்றுமே பொய்யாகாது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

---

## கோபிநாத் ஈழம் வருகிறார்!

சர்வதேச நாட்டிய அரங்கில் புகழ்பெற்று விளங்கும் நாட்டியமேதை டாக்டர் குரு. கோபிநாத் அவர்கள் இம்மாதம் 29ஆம் தேதி ஈழம் வருகின்றார். ஈழத்து நட்டியத்துறையை அலங்கரித்து, புதிய பரம்பரையை உருவாக்கி வரும் எமது பிரபல நாட்டியக்கலைஞர்கள் பலரின் குருவாக விளங்கும் இவருக்கு, இவருடைய ஐம்பதாண்டு நாட்டியப்பணியைப்பாராட்டி யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் விழாக்கள் நடைபெறும்.

இம்மாதம் 31 ஆம் தேதி யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவிருக்கும் விழாவுக்கான ஏற்பாடுகள் வடமாநில கல்வி இயக்குநர் திரு. தி. மாணிக்கவாசகர் தலைமையிலான செயற்குழு மேற்கொண்டு வருகிறது. இக்குழுவின் துணைத் தலைவர்களாக ஸ்கந்தவரோதயக் கல்லூரி முதல்வர் திரு. ப. ஏகாம்பரம், நடன ஆசிரியர் திரு. ஏ. சுப்பையா ஆகியோரும், பொதுச் செயலாளர்களாக யாழ். காரியாதிகாரி திரு. இ. யோகநாதன், இணைச் செயலாளர்களாக கலாசார அலுவலர் செல்வி. பவானி செல்லையா, திரு. எம். குமாரசாமி ஆகியோரும், இணைப் பொருளாளர்களாக நடன ஆசிரியர் திரு. வேல் ஆனந்தன், சு. சிவபாதசுந்தரம் ஆகியோரும் பணியாற்றுகின்றனர்.

கொழும்பு நிகழ்ச்சிகள் செப்ரம்பர் முற்பகுதியில் நடைபெறும் திரு. கோபிநாத்துடன் அவருடைய துணைவியார் திருமதி. தங்கமணியும் வருகின்றார்.

---

## கொக்குவிலில் அமரர் நாகா நினைவுக்கூட்டம்

எதிர்வரும் 19.8.73ல் கொக்குவில் கிழக்கு செம்பியன் வீதியில் உள்ள விளையாட்டுத்திடலில் அமரர் டாக்டர் நாகநாதன் அவர்களின் நினைவுக்கூட்டம் ஒன்றை நடத்த கொக்குவில் தமிழர் கூட்டணிக்கிளை ஏற்பாடு செய்து வருகிறது. அன்று நண்பகல் கொக்குவில் மாத்தனை முருகமூர்த்தி கோவிலில் அமரர் பெயரால் விசேட பூசை அபிஷேகமும் நடைபெறவிருக்கின்றன.

---

## தமிழ்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

● 'சிறீலங்கா' என்பது தமிழில் 'இலங்கை' என்று வழங்குமாறு நீங்கள் வழிப்படுத்திய பின்னரும் அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனமும் பிற கூட்டுத்தாபனங்களும் 'சிறீலங்கா' என்றே வழங்கிவருகின்றன.

● வெளிநாட்டு உள்நாட்டுவர்த்தக அமைச்சும், கூட்டுறவு ஆணைக்குழுவும் கமத்தொழில் காணி அமைச்சும், அதன் கீழ் உள்ள திணைக்களங்களும் சுகாதார அமைச்சும் தமிழ் ஒதுக்கலில் முன்னணி வகிக்கின்றனர்.

● பல அமைச்சுக்களும் திணைக்களங்களும் தமிழ் உபயோகம் பற்றிய 760ம் எண்ணுடைய 28-1-69ம் திகதியை கொண்ட நிறைசேரிச் சுற்றறிக்கையை தொடர்ந்து புறக்கணித்து வருகின்றன.

● இப்புறக்கணிப்பை நிறுத்துவதற்கு தக்க உறுதியான நடவடிக்கைகளை நீங்கள்எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது:

—மேற்கண்டவாறு பண்டிதர் கா. பொ. இரத்தினம், அரசகரும மொழித் திணைக்கள ஆணையாளருக்கு சுட்டிக் காட்டியுள்ளார்.

---

## விடுதலை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒழிந்தது; சுயஆட்சி பெற்றனர். பிலிப்பைன் நாடு பிலிப்பைன் வாசிகளுக்கே உரிமையாயிற்று.

மாவீரன் ரிசாலின் சவப்பெட்டி கல்லறையிலிருந்து தோண்டி எடுக்கப்பட்டது. தூக்குமேடை இருந்த இடத்தில் புதைக்கப்பட்டது. தூக்குமரம் இருந்த இடத்தில் சுதந்திரக்கொடி பறந்தாடியது. மாவீரன் ரிசால் இயற்றிய ஒரு புரட்சிக் கவியைப்பாடி அந்த விடுதலை வீரனுக்கு வணக்கம் செலுத்தினர். அந்தக் கீதம்தான் அவர்களின் தேசிய கீதம்.

கணவனைப் பலிகொடுத்த ரிசாவின் மனைவி வருந்தினாள். ஆனால் அவர் இறப்புத்தான் நாட்டை மீட்க உதவியது என்று நினைத்து மகிழ்ந்தாள்.


"பசியால் வாடி வேலையின்றி இருக்கும் மக்களுக்கு வேலை அளிப்பது ஒன்றே ஆண்டவன் தரிசனம் அளிப்பதற்கு ஒப்பாகும்."

—காந்தியடிகள்.

1000 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை அனுப்பி ஓர் அழகிய காந்தி சிலையைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சோப் தொழிற்சாலை
த. பெ. இல். — 77, யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழினத்துக்குக் கொள்ளி வைப்பதில் யூ. என். பி.யைவிட எவ்வகையில் குறைந்தது சிறீலங்கா சுதந்திரக்கட்சி?

## ஆளுங்கட்சிகளின் அடிவருடிகளே! முதுகெலும்பு இருந்தால் பதில் சொல்லுங்கள்!!

பண்டாரநாயகா-செல்வநாயகம் உடன்படிக்கையை எதிர்த்து அதனைக் கிழித்தெறியச் செய்த யூ.என்.பி.யுடன் சேர்ந்து லேக்கவுஸ் பத்திரிகைப் பகிஷ்கரிப்பில் தமிழரசார் சேரலாமா? என்று சந்தேகம் கொள்கிறார் சமசமாசி விசுவநாதன்.

அரசாங்கத்துக்குப் புதுக்கவால் பிடிக்கத் தொடங்கியுள்ள யாழ்ப்பாணத்து நாளேடு அவருடைய பிதற்றலைக் கொட்டை எழுத்தில் வெளியிட்டு மகிழ்கின்றது.

சமசமாசி விசுவநாதனே! நீரும் உமது கட்சியும் சேர்ந்திருக்கும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி தமிழருக்கு மாறாக — துரோகமாக அநியாயம் செய்யவில்லையா?

ஆளுங்கட்சியை அண்டிப் பிழைப்பதற்காக 'பட்டப் பகலை இரவு என்று கூறும் பாதகர்களாக' நீங்கள் ஏன் காட்சி அளிக்கிறீர்கள்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் ஐ. தே கட்சியும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் என்பதை நீங்கள் இன்னும் அறியவில்லையா?

இலங்கையில் ஆட்சியைப் பிடிப்பதற்குத் தமிழருக்குத் துரோகஞ் செய்வதில் இரண்டு கட்சியும் போட்டி போட்டு தமிழினத்துவேஷத்தையும் தமிழ இனக் கொலையையும் வளர்த்து வருகின்றன என்பதைச் சென்ற காலச் சரித்திரம் நிலைநாட்டியுளதே!

எதிர்காலத்தில் தாம் பிரதம அமைச்சராகலாம் என்று மலைப்பால் குடிக்கும் ஒரு 'கடுவா' இப்பொழுது தமிழருக்குப் படுபாதகமாக இனத் துவேஷம் கக்கி வருகிறாரே! அவர் செல்வா, தொண்டமான் பெயரை உச்சரிக்காத நாள் இல்லையே! அவரை இடதுசாரிகள் உற்சாகப் படுத்துகிறார்களே!

மூன்றில் இரண்டு பங்குக்கு மேற்பட்ட பாராளுமன்ற உறுப்பினரையும இடதுசாரிகள் என்று தம் பட்டமடித்துத் 'தோசை, வடை' பல்லவி பாடினவர்களையுங் கொண்ட ஐக்கிய முன்னணி அரசாங்கம் இன்று தமிழரின் பிரச்சினையைத் தீர்க்க என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

சமசமாசக்கட்சித் தலைவர் டாக்டர் என் எம். பெரேரா யாழ்ப்பாணம் வந்த பொழுது தமிழர்களுக்கும் பல குறைகள் உள்ளன; இவற்றைத் தீர்க்க அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை தொடங்க வேண்டுமென்று கூறினரே! பேச்சுவார்த்தை தொடங்கப்பட்டதா? ஏன் தொடங்கப்படவில்லை.

குமாரசூரியர் தர்பார் நடக்கும் பொழுது ஜே. பி. நல்லிணக்கச்சபைத் தலைவர் ப. நோ. கூ. சங்க இயக்குநர்கள், உதவி தபால் அதிபர் மக்கள் குழு முதலிய பதவிகளையும் சிறு சிறு உத்தியோகங்களையுங் கொடுத்து சிறீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஆள் பிடிக்கும் வேலை நடக்கும் பொழுது — தமிழரின் உரிமையைக் கொடுக்க அரசாங்கம் எண்ணியிருக்கிறதென்று யாரேனும் கூறினல் அவர்கள் அங்கொடைக்குப் போகவேண்டியவர்கள் அன்றேல் குமாரசூரியர் கும்பலின் அடிப்பொடி ஆள்வார்களாக வேண்டியவர்களே!

திரு. விசுவநாதன் சந்தங்கொண்டதால் மறந்துவிட்ட—மறைக்க முற்பட்ட சிறீலங்காச் சுதந்திரக் கட்சியின் தமிழினத் துரோகச் செயல்களில் சிலவற்றை மீண்டும் அட்டவணைப் படுத்துகிறோம்.

1 1956 இல் தனிச் சிங்களச் சட்டத்தை நிறைவேற்றியது (இதனை நிறைவேற்றியபண்டாரநாயக்காவே இதனுடன் தமிழுக்கும் சட்டம் சேர்த்து நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும் என்று பின் இரங்கினர்.)

2 1958 இல் வகுப்புக் கலவரத்தை நாட்டில் பரவச் செய்து தமிழரைத் துன்புறுத்தியது.

3 1960 இல் தமிழரசுக் கட்சிக்கு பல உரிமைகளை வாக்களித்து யூ. என்.பி. அரசை விழுத்த உதவி பெற்று ஆட்சிககு வந்த பின் தமிழரசுக் கட்சியை ஒழிப்பதற்கு முயன்றது.

4 1960 இல் சிங்களத்தையே நீதி மன்ற மொழியாக்குஞ் சட்டத்தை நிறைவேற்றியது.

5 1960 இல் தமிழ் மொழிப் பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துவிட்டு பின் அவற்றை நிறைவேற்றுமல் மீட்டது.

(6) 1965ல் தேசிய அரசு தமிழ்ப் பிரமாணங்களைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றிய பொழுது எதிர்ப்பு ஊர்வலங்களை சம மாசக் கட்சியுடனும் கம்யூனிஸ்டுக் கட்சியுடனும் சேர்ந்து நடத்தி ஒரு பௌத்த பிக்குவின் உயிருக்கு உலை வைக்க காரணமாக இருந்து நாட்டிலே இனக் கலவரத்தைப் பரப்பியது. மாவட்டச்சபை மசோதாவுக்கு எதிர்ப்பை [illegible]

(7) இப்பொழுது ஆளும் மூன்று கட்சியினரும் 'தோசை வடை' பல்லவியை நாட்டிலும் ஏன் பாராளுமன்றத்திலும் பாடியது.

(8) ஆட்சிக்கு வந்த பின் இந்த மூன்று கட்சியினரும் சேர்ந்து தமிழ் எதிர்ப்பில் ஈடுபட்டு உயிரிழந்த இரத்தினசார தேரோவுக்கு நினைவுத்தூண் எழுப்பியது.

(9) தொழிற்சங்கங்களைத் தமிழ்மொழிப் பிரமாணங்களுக்கு எதிராக ஆர்ப்பாட்டஞ் செய்யத்தூண்டியது.

(இவற்றிலெல்லாம் பங்கு கொண்ட சமசமாசக்கட்சிக்கும் அதன் தொண்டனை விசுவநாதனுக்கும் தமிழைப் பற்றிக் கூற என்ன உரிமை இருக்கிறது. ஆடு நனைகிறதென்று ஓநாய் அழுவதிலும் இது கேடு கெட்ட செயலாகும்)

(10) தமிழையும் சைவம் கிறிஸ்த்தவம் இஸ்லாம் முதலிய மதங்களையும் புறக்கணித்து தமிழரை அடிமைகளாக்கும் அரசியல் திட்டத்தை நிறைவேற்றியது.

(11) புத்தூரிலேயுள்ள பஞ்ஞசிக தமிழ்ப்பாடசாலையில் துணிந்து சிங்கள மூலம் கற்பிப்பதற்கும் சைவப் பிள்ளைகளுக்கு பௌத்தம் போதிப்பதற்கும் சைவத் தமிழ்ப்பிள்ளைகள் தொகையாகவுள்ள அப்பாடசாலைக்கு வேண்டுமென்றே கல்வித்திணைக்களத்தின் கொள்கைக்கும்— நடைமுறைக்கும் —நீதிக்கும் நியாயத்துக்கும் மாறாக பௌத்த சிங்கள வரைத் தலைமை ஆசிரியராக நியமித்ததும் இந்த அரசாங்கமே.

இதனுடன் சேர்ந்து இதற்கு வால்பிடிக்கும் விசுவநாதரே தமிழருக்காகப் பேச உமக்கு உரிமை உண்டா?

(12) தரப்படுத்தல் எனும் அநியாயப்போர்வையில் பல்கலைக் கழகத்தெரிவில் தமிழ் மாணவர்களுக்குப் பச்சைத் துரோகஞ் செய்ததும் இந்த அரசாங்கமே. இந்த அரசாங்கத்தை அண்டிப் பிழைக்கும் விசுவநாதனே குமாரசூரியர் கும்பலே உங்கள் நாக்குகளை இரும்பூசியால் சுட்டுப் பிராயச்சித்தஞ் செய்துவிட்டுத்தான் நீங்கள் தமிழரைப் பற்றிப் பேசலாம்.

(13) மக்களின் இறைமைக்கு —ஜனநாயகத்துக்கு மாறாக மக்களால் தெரிவுசெய்யப்படாத ஒருவரை அமைச்சராக்கி அவரைத் தமிழரின் பிரதிநிதி என்று வாய் கூசாமல் தம்பட்டம் அடிப்பதும் இந்த அரசாங்கமே! ('ஜனநாயகம்' சொல் ஆராய்ச்சியில் அமைச்சர் குமாரசூரியர் ஈடுபட்டு தமிழ்பேரறிஞராகவும் முயல்கிருர். அவருடைய ஆராய்ச்சியின்படி அவருக்கு தமிழும் தெரியாது —வடமொழியும் தெரியாது என்பது வெளியாகிவிட்டது.)

(14) பாராளுமன்றத்தேர்தலில் தோற்ற தமிழர்களைச் சிறீலங்காக் கட்சி அமைப்பாளராக்கி அவர்களின் சிபார்சுப்படி ப. நோ. கூ. ச. இயக்குநர்கள், நல்லிணக்கச் சபை உறுப்பினர்கள் ஜே. பி.க்கள் முதலியோரை நியமிக்கும் விந்தையான ஊழல் மலிந்த அரசாங்கம் எது.

(15) அரசாங்க சேவை ஆணையாளர் குழு இலங்கை வானொலிப் பணிப்பாளர் குழு உள்ளூர் ஆட்சிச் சேவைக்குழு இ. போ. சபை அரசாங்க திரைப்படக் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் குழு முதலியவற்றின் நியமனங்களில் தமிழரைப்புறக்கணித்துவரும் அரசாங்கம் எது?

மேலும் இந்தப்பட்டியலை வளர்க்க வேண்டுமா?

விசுவநாதனே! குமாரசூரியர் பனிசிமோல் சண்டியன், மாட்டின் கும்பலே! இவை ஒவ்வொன்றையும் மறுக்க உங்களால் முடியுமா? உண்மையை ஏற்றுக்கொள்ளுங்கள் வயிறுவளர்க்கும் வழியை—பதவியைப் பிடிக்கும் வழியை விடவிரும்பாவிடின் தமிழினத் துரோகக் கட்சிகளுக்கு வக்காலத்து வாங்கிப்பேசிப் பாதகர்களாகச் சரித்திரத்தில் இடம் பெறுவீர்கள்!

## சூரியருக்கு சூடச்சூட....

'காங்கேசன் துறையில் ஏன் இடைத்தேர்தல் நடக்கவில்லை என்ற கேள்வி பொதுமக்கள் மனதில் எழவில்லை.'

—குமாரசூரியர் (ஈழநாடு 20.7.73)

—பொதுமக்களுடன் தொடர்புள்ளவர்களுக்கு மட்டுமே பொதுமக்களின் கருத்துப்புரியும். குமாரசூரியருக்கு பொதுமக்களின் கருத்து புரிவதற்கு எதுவித நியாயமுமில்லையே! பொதுமக்கள் மனதை அளவிட்டுக்கூற இவர் யார்?

ஃ

'அரசியல் சாசனத்திற்கு விஸ்வாசம் தெரிவிக்கக்கூடாது என்ற காரணத்தினுல் ஒருவர் பதவி துறந்தார்.'

—குமாரசூரியர் (ஈழநாடு 20.7.73)

—ஐயோ கர்மம், கர்மம்—அரசியல் சட்டத்துக்கு விசுவாசம் தெரிவிக்க மறுத்து அவர் பதவி விலகவில்லை; சட்டத்துக்கு விசுவாசம் தெரிவித்து தேசிய பேரவைக்கு சென்று மூன்று மாதம் கழித்து, அரசியல் சட்டத்தை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளுகிருர்கள் என்ற அரசாங்கத்தின் வாத்த்துக்கு சவால் விடுத்தே அவர் பதவி துறந்திருக்கிருர்—இதுகூட தெரியாமல் என்னையா சூரியரே உமக்கு அரசியல்?

'நண்பர் நடராசா என்ன -நடக்காதராசா வந்தாலும் அந்த எழுத்தை மாற்றிடமுடியாது.'

—குமாரசூரியர் (ஈழநாடு 20.7.73)

—எந்த எழுத்தை? 'மீளா அடிமை சிறிமாவுக்கு நானே...' என்று எழுதிக்கொடுத்த அடிமைச்சீட்டையா? என்று கேட்கிருன் ஆபீஸ் பையன்.

ஃ

'ஆண்டவனை வணங்கும் கை கைக்குண்டை எடுக்கும்கையாக மாறக் கூடாது.'

—குமாரசூரியர் (ஈழநாடு 20.7.73)

—ஆம், உண்மைதான் அமைச்சரே! ஆனல் அதே ஆண்டவனை வணங்கும் கை, (சிறிமா) அம்மாவை வணங்கும் கையாக மாறக்கூடாது என்பதையும் புரிந்து கொள்ளும்!

ஃ

'எதிர்மாறுன கொள்கைகளை கொண்டிருந்தாலும் நாம் அவர்களை துன்புறுத்தவோ இம்சிக்கவோ விரும்பவில்லை.

—குமாரசூரியர் (ஈழநாடு-20.7.73)

—ஆகா, ஆகா... அமைச்சரே அதனுல் தான் உங்களிலிருந்து அரசியலில் மாறுபட்ட கொள்கையுடைய தங்கத் தமிழ்க் கவிஞன் காசி ஆனந்தனையும், வண்ணை ஆனந்தன் போன்ற இளைஞர்களையும் அவசரகாலச் சட்டத்தின்கீழ் எவ்வித விசாரணையுமின்றி ஆண்டுக்கணக்காக சிறைக்குள் தள்ளிப் பூட்டி வைத்திருக்கிறீர்களோ...?

ஃ

'அரசியல் வேறுபாடு இருந்தாலும் மரியாதையுடன் பண்புடன் பழக வேண்டும்.'

—குமாரசூரியர் (ஈழநாடு 20-7-71)

—இது அமைச்சர் தமக்குத் தாமே செய்து கொள்ளும் சுயபோதனையோ என்று கேட்கிருன் நம ஆபீஸ் பையன்!

## தமிழுணர்ச்சிப் பாடல்கள் பாடியவர் தங்கத்தாத்தா!

—இரசிகமணி

'தங்கத் தாத்தா சோமசுந்தரப் புலவர் தமிழ் மொழி குறித்துப் பலபாடல்கள் பாடியவர். இங்குள்ள தமிழ் அரசியல் கட்சிகள் தமிழ் மக்களிடையே தமிழுணர்ச்சியை ஊட்டுவதற்கு அந்தப் பாடல்களைத் தங்கள் அரசியல் கூட்டங்களில் பயன்படுத்தலாம். அதனுல் நல்ல விளைவுகள் ஏற்படலாம்.' என்றுர் இரசிகமணி கனக செந்திநாதன்.

மானிப்பாய் 'சிறறி' மண்டபத்தில் மக்கள் கலாசார முன்னேற்றக் கழக ஆதரவில் இரா. பாலசந்திரன் தலைமையில் சோமசுந்தரப் புலவர் நினைவு விழா நடைபெற்றது.

விழாவில் இரசிகமணி மேலும் பேசுகையில் சில வாரங்களுக்கு முன்னர் ஓர் ஆசிரியர் சங்கக் கூட்டத்தில் தமிழ் வாழ்த்துப் பாடுமாறு தலைவர் பணித்ததும் அங்குள்ள ஆசிரியர்களே பாடல் எதுவும் தெரியாது விழித்தாகவும் இதற்குக் காரணம சோமசுந்தரப் புலவரது பாடல்கள் இன்னும் சரியான முறையில் அறிமுகமாகாததுதான் என்றும், தங்கத தாத்தா தமிழ் வாழ்த்தாகப் பாடக்கூடிய பல பாடல்கள் எழுதியுள்ளார் என்றும் குறிப்பிட்டார்.

திரு. பொ சண்முகநாதன் பேசுகையில் நவாலியூரிலும் அதன் அயலூர்களிலும் உள்ள கோயில்களில் ஆடுகள் பலியிடும் வழக்கத்தை நிறுத்தவேண்டி சோமசுந்தரப் புலவர் 'ஆடு கதறியது' பாடல் பாடியதைக் குறிப்பிட்டு, அப்படியிருந்தும இங்குள்ள நான்கு கோயில்களில் இன்றும் இக்கொடிய வழக்கம் இருப்பதாகவும், அதனை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதுதான் புலவர் நினைவுக்கு நாம் செய்கின்ற பெரும பணி என்றும் குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அத்தியாயம் (21)




வானம் குமுறிக்கொண்டிருந்தது. இடைக்கிடையே பேய்க்காற்று கூரையைப் பிய்த்துவிடும் போலிருந்தது. வெளிச்சுற்றுடலைப் பற்றிய நினைவுகளே துமின்றி சிகரெற்றை ஒன்றன்பின் ஒன்றாக ஊதிக்கொண்டிருந்தான் ரமேஷ். தனக்குச் சாதகமாக இருந்த சிலர் தனக்குப் பாதகமாகத் திரும்பி விட்டதால் ஏற்பட்ட கொதிப்பை விட ராதாலட்சுமி எடுத்தெறிந்து பேசி விட்டதே அவன் மனதைக் குடைந்து கொண்டிருந்தது. அவனுடைய அக்காள் புருஷன் என்று கூட மதியாது கதைத்ததுதான் அவனுக்கு மிகுந்த கோபத்தை உண்டாக்கியது.

ஆத்திரம் பொங்க அவர்களை அவன் பார்த்துக் கொண்டு நின்ற சமயம், 'வந்திட்டீர்களா?' என்றாள் கவிதாலட்சுமி.

'உங்கள் நாடகத்தைப் பார்த்து ரசிக்க வந்திட்டன் கவிதா.'

'சகோதரங்களுடன் பிறந்திருந்தாலல்லவா உங்களுக்கு எங்களைப் பற்றித் தெரியும். இதைப் பார்த்தால் நாடகம் மாதிரியில்லாமல் வேறு எப்படித் தெரியும்?' என்றாள் ராதா.

'ராதா! உனக்கொன்று மட்டும் உறுதியாகச் சொல்லுறன் நான் நினைத்தபடி தான் இங்கு எதுவும் நடக்கும். உன் மனம் போலக் கோட்டை கட்டினால் கண்ணீரே உனக்குத் துணைவரும்' என்றான்.

'நானும் உங்களுக்கு ஒன்றைத் திடமாகச் சொல்லுறன். என் வாழ்க்கைப் பிரச்சினையில் தலையிட இனி யாருக்கும் உரிமை கிடையாது. அது என் சொந்த விடயம்' என்றாள் ராதாலட்சுமி.

'ஓ—அந்தளவுக்கு வந்திட்டியா? உன் விடயத்துடன் உன் அக்காளையும் சேர்த்துக் கொள் ராதா.'

'என்னைப்பற்றி நானே கவலைப்படவில்லை. நீங்களேன் கவலைப்படுகின்றீர்கள் அவளையும் ஏன் பயமுறுத்துகின்றீர்கள்?' என்றாள் கவிதா.

'கவிதா! அப்படிச் சொல்லித்தானே அப்பாவையும் கொலை செய்தார்' என்றாள் கேலியாக ராதாலட்சுமி. அவளுடைய கேலிப் பேச்சில் அவன் இதயம் விண்ணென்று நடுங்கியது.

'நானா உன் தந்தையை...? நீ அவர் விருப்பப்படி கல்யாணம் செய்திருந்தால் எதுவும் நடந்திருக்க முடியாது. அவர் மரணத்துக்கு நீதான் பொறுப்பாளி' என்றான் ரமேஷ்.

'பெற்றவன் தன் பிள்ளையை ஒரு பொழுதும் பலிகொடுக்க விரும்பமாட்டான் மிஸ்டர் ரமேஷ்! உங்கள் மற்ற மகளையும் நீங்களே வைத்துக் கொள்ளுங்கள் என்று எப்பொழுது அப்பாவிடம் கூறினீர்களோ அப்பொழுதே அப்பா செத்துவிட்டார். அதற்குக் காரணம் நீங்கள். அப்பா எப்படி இறந்தார்? ஏன் இறந்தார்? என்பது இப்பொழுது புரிகின்றதா?' என்று கர்ஜித்தாள் ராதாலட்சுமி.

ரமேஷ் படித்தவன் தான். ஆனால் அவன் ஒரு கோழை. நாகரீகக் கல்வியின் பயன் மனிதனைக் கோழைத்தனமாக்குவது தான் என்பதற்கு ரமேஷ் ஒரு உதாரணம். அவள் கூறிய வாக்கியங்கள் அவனை நிலைதடுமாற வைத்துவிட்டது. அவன் அதுவரை நின்றிருந்த இடத்தைவிட்டு நகர்ந்து, 'ராதா! நீ சொல்வது——?' என்றான்.

''நான் சொன்னது உங்களுக்குப் புரிந்திருக்குமென்று நினைக்கின்றேன். நீங்கள் ஒரு கொலைகாரர்.'

'நோ. நோ.' என்று கதறினான் ரமேஷ்.

'ஜெஸ் ஜெஸ். யூ ஆர் ஏ மேடரர்' என்று எதிர்க்குரல் எழுப்பினாள் ராதாலட்சுமி.

'நீயுமா கவிதா அப்படி நினைக்கின்றாய்?' என்றான் அவள் பக்கம் திரும்பிப் பாராமல்.

'அவள் உங்கள் மனைவியானாலும் நீங்கள் அப்பாவுக்குக் கூறியதை அவளும் கேட்டுக்கொண்டுதான் நின்றாள். ஆனால் மனைவி என்ற ஸ்தானத்தில் இருப்பதினால் மறந்துவிட்டாளோ என்னவோ. உங்கள் நாகரீக அகராதிப்படி அவள் செய்ய வேண்டியது என்ன தெரியுமா?

'என்ன செய்துவிடுவாள்?' என்று கம்பீரத்துடன் கேட்டான ரமேஷ்.

'விவாகரத்து'

'என்ன?' என்று திகைப்புடன் கேட்டான் ரமேஷ்.

'ஆமாம் விவாகரத்து நீங்கள் மிரட்டுவதற்கும், உங்கள் மனம் போல வாயில் வந்ததைக் கூறுவதற்கும் அவள் ஒன்றும் பிச்சைக்காரி இல்லை. புரிகின்றதா மிஸ்டர் ராமேஷ்?' என்றாள் ராதாலட்சுமி.

'லட்சு! நீ பேசாமல் போ என் வாழ்வு எப்படியானாலும் பரவாயில்லை. ஒருவர்க்கென்று வாழ்க்கைப் பட்டுவிட்டன். வைத்திருப்பதோ விலக்குவதோ அவர் விருப்பம்.' என்று கவிதா கூறிய பொழுது ரமேஷ் மேல்மாடி நோக்கிச்சென்றான்.

அவன் உள்ளம் குமுறியது. பெரியவர் இருந்தபொழுது அவர் கட்டுப்பாட்டுக்குள் கிடந்தவர்கள் இப்பொழுது மனம் போலப் பேச ஆரம்பித்தது அவனுக்கு வியப்பளித்ததாயினும், எப்படியாவது சுரேஷ் குமாரின் திருமணத்தை நடாத்தி வைத்துவிடவேண்டும் என்று எல்லாவற்றையும் சகித்துக் கொண்டான்.

கண்டி பொலிஸ் நிலையத்தில் குற்றத் தடுப்புப் பகுதி அதிகாரியின் அலுவலகத்தில் புதிதாக வந்திருந்த உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் விசாரணை நடாத்திக்கொண்டிருந்தார். கடத்தல் வைரங்களுடன் ஒருவனைக் கையும் மெய்யுமாகப் பிடித்துக் கொண்டு வந்திருந்தனர். அவன் சுரேஷ்குமாரின் கம்பனியில் வேலை செய்பவன் என்பதை அறிந்துகொண்டதும், மேற்கொண்டு விசாரணையை நடாத்துவதில் அவருக்கு ஆவல் ஏற்பட்டது. அந்தக் கணமே உடனடியாக யாழ்ப்பாணத்துக்குத் தகவல் கொடுத்தார்.

புதிதாகப் பயிற்சி பெற்றவர்களில் ஒருவனை வாசுதேவன் யாழ் பொலிஸ் நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டான். அவனுடன் பயிற்சி பெற்ற ஓர் சிங்கள அதிகாரியே கண்டியிலிருந்து அந்தத் தகவலைக்கொடுத்திருந்தார். அந்தத் [illegible] கேட்ட நேரம் தொடக்கம் வாசுதேவனுக்குப் புதிய உற்சாகம். உடனேயே அதற்கான முயற்சியில் ஈடுபட்டான். விடிவதற்குள் அந்த முயற்சியில் அவனுக்கு வெற்றியும் கிட்டியது. சம்பந்தப்பட்ட ஆளையும், அவன் வந்த காரையும் வைரத்துடனேயே பிடித்து விட்டான். உடனடியாகக் கண்டியிலுள்ள தனது நண்பனுக்குத் தகவல் கொடுத்து விட்டுத் தான்தனது தாயைக்காணச் சென்றான்.

அரசாங்கத்தினால் அவனுக்குக் கொடுக்கப்பட்ட குவாட்டர்சில்தான் அவன் தாயுடனிருந்தான. அவன் பட்டப்படிப்பு முடிந்த பின்னர் எழுதுவினைஞர் பரீட்சையில் தெரிவாகி வேலை கிடைத்தபொழுது மகிழ்ச்சியடைந்தான். அதன் பின்னர் இப்பதவிக்கான விளம்பரம் செய்திருந்தபொழுதே பட்டப்பரீட்சையின் முடிவும் வெளியானது. அதில் அவனுக்குச் சாதகமான முடிவு வெளியானதினாலும், காலமும் துணை செய்ததினாலும் எதிர்பாராத விதமாகப் பெரும் பதவி




ஒன்றுக்கு உரியவனாகிவிட்டான். வந்ததும் வராததுமாக ஒரு சமூகத்துரோகியையும் அவனது கூட்டத்தினரையும் சட்டத்தின் வலைக்குள் வீழ்த்தும் கடமை கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தவனாய் தாயைக் காண வந்தான்.

'இரவு பூராக எங்கேடா போயிருந்தாய்?' என்றாள். பாக்கியம்மாள்.

'ஒரு வைரக்கடத்தல்காரனைப் பிடித்து வந்தேன் அம்மா.'

'பதவி கிடைத்து ஒரு மாதத்துக்குள் பதவி உயர்வுக்கு வழிதேடப் புறப்பட்டுவிட்டாயா?'

'இல்லை அம்மா. என்னோடு பயிற்சிபெற்ற சிங்கள நண்பனொருவன் கண்டியிலிருந்து தகவல் கொடுத்தான். அதன் பேரில்...'

'என்னவோ அப்பா கடமையைக் கடமை என்று நினைத்துச் செய்.''

'அம்மா! உங்கள் அன்பும் ஆசியும்தான் என்னை இந் நிலைக்குயர்த்தியது.' என்றவன் ஆடைகளைக் களைந்து விட்டுக் குளிக்கச் சென்றான்.

காலை ஒன்பது மணியளவில் வாசுதேவன் தனது அலுவலகத்துக்குச் சென்றான். அவன் வரவுக்காகச் சிலர் காத்திருந்தனர். சுங்கப்பகுதி அதிகாரி ஒருவர் அவனுடன் காரியாலய அறைக்குள் சென்று சில நிமிடங்களின் பின்பு வெளியேறினர். அவருக்குப் பின்பு [illegible] மணியை [illegible] உள்ளே செல்லுமாறு வாசலில் நின்ற பொலிஸ் அதிகாரியொருவர் அனுமதியளித்தார். அவள் உள்ளே நுழைந்த சமயம் ஏதோ எழுதிக்கொண்டிருந்த வாசுதேவன், 'உட்காருங்கள். வந்த காரியம் என்ன?' என்று கேட்டான் எழுதுவதை நிறுத்தாமல்.

'வாசுஅண்ணா! நீங்களா?' என்றாள் அவள்.

'வாசு அண்ணா? நீங்கள் யார்?'

'நான் சித்திரா. என்னைத் தெரியவில்லையா?'

'சித்திராவா? எந்தச் சித்திரா?'

'என்னையா கேட்கின்றீர்கள்?'

'வேறு யாரை? உலகில் எத்தனையோ சித்திராக்கள் இருக்கின்றார்கள். அதில் நீங்கள்...' என்று கூறியவன், விழிகள் இரண்டும் நீர் பெருக நிற்கும் சித்திராவை உற்று நோக்கினான்.

சித்திராவின் உள்ளம் தடுமாறியது. 'வாசுதேவன் உருவில் வேறு யாரேனும் ஒருவனாக இருக்குமோ? தான் பயித்தியக்காரத்தனமாக உளறுகின்றேமோ' என்று எண்ணியவள் அந்த முகத்தை ஊடுருவி நோக்கினாள். எந்தவித உணர்வுகளையும் கண்டுபிடிக்கமுடியாது ஒரே தன்மையில் உள்ள முகத்தில், இமைப்பையே மறந்து உற்றுநோக்கும் அந்தச் சிறு விழிகள் அவன் வாசுதேவன்தான் என்பதை உறுதிப்படுத்துகின்றதே என்று எண்ணியவளாய்த் தடுமாறி நின்றாள்.

'என்னம்மா! நீங்கள் யார்? எதற்காக இங்கே வந்தீர்கள்? என்ன உதவி தேவை?' என்று மீண்டும் கேட்டான் வாசுதேவன்.

'என் கணவரைக்கடத்தல்காரன் என்று பிடித்து வைத்துள்ளதாய் அறிந்தேன். என் வீட்டையும் சோதனையிட்டனர். அது பற்றித் தெரிந்து போகவே வந்தேன். உங்கள் அனுமதியின்றி எந்தத் தகவலும் கூறமுடியாது என்று இன்ஸ்பெக்டர் கூறினார். அதுதான் இங்கே வந்தேன்.'

'ஓ! மிஸ்டர் சாமிநாதனின் மனைவியா நீங்கள்? அவரைக் கஸ்டம்ஸில் ஒப்படைத்துள்ளோம். உன் கணவன்கடத்தல்காரனில்லை என்றுகூற வந்தாயா?'

'இல்லை. எய்தவன் இருக்க நீங்கள் அம்பைப் பிடித்து வைத்திருக்கின்றீர்கள் என்று சொல்ல வந்தேன்.'

'உன் கணவன் வெளிநாட்டுக் கம்பனி ஒன்றில் வேலை செய்வதாக அறிந்தேன். இந்தக் கடத்தலுக்கும் அவர்களுக்கும் தொடர்பு உண்டா?'

என்னவோ நான் அறியேன். அந்தக் கம்பனிப் பாகஸ்தருக்கு இதில் உரிமையுண்டு.'

'அவர் யார்?'

'மிஸ்டர் சுரேஷ் குமார்.'

'ஆல்ரைட் உங்களுக்கு எந்த உதவியையும் செய்ய முடியாது. கடத்தல்பொருள்களுக்குத் தகுந்தபடி குற்றம் கட்டும்படி கூறுவார்கள். அதைக் கொடுத்து மீட்க முடியுமானால் முயற்சி செய்யுங்கள்.'

'அண்ணா'

'நான் யாருக்கும் அண்ணன் இல்லை. இது பொலிஸ் நிலையம். ஞாபகமிருக்கட்டும் நீங்கள் போகலாம்.' என்று கூறியதும், அவள் எழுந்து வெளியே வந்தாள்.

பதினொரு மணியளவில் அவன் எழுந்து வெளியே வந்த பொழுது, சித்திரா அங்கே நின்றிருந்தாள். அவளைப் பார்த்தும் பாராததுபோல அவன் சென்றான். அவள் பின்னால்ஓடிச்சென்று 'சார்' என்றாள் அதற்கிடையில் இன்ஸ்பெக்டர் ஒருவர் வந்து அவன் முன் சலூட் அடித்து நின்று ஒரு பத்திரத்தை நீட்டினான். அதை வாங்கிப் படித்தவன், 'ஆல்ரைட் அவனைக் கண்காணிக்க ஏற்பாடு செய்யுங்கள்.' என்று கூறிவிட்டு, சித்திரா பக்கம் திரும்பி,' உன் கணவனுக்குப் பணம் கட்டி மீட்டுச் சென்றுவிட்டான் ஒருவன். நீங்கள் இனிச் சந்தோஷமாகப் போகலம்.' என்றான்.

'எனக்கு அந்தக் கவலை இல்லை இப்போ'

'வேறு என்ன கவலை?'

'அண்ணா! நான் ஒரு அற்பப் பிராணி, என் தவறுகளை மன்னித்து விடுங்கள் என்று உங்கள் காலடியில் விழுந்து கதறி அழ ஒரு சந்தர்ப்பம் தாருங்கள் என்று கேட்கத்தான் காத்திருந்தேன். நீ வெறுத்தாலும் நான் உன்னை வெறுக்கேன் சித்திரா என்று கூறிய நீங்களா...? என்று அவள் கேட்ட பொழுது, அவன் எதுவும் பேசாமல் வீட்டிற்குள் நுழைந்து விட்டான்.

'உள்ளே வரலாமா?'

'தாராளமாக வரலாம். வீட்டுக்குள் வந்தவளை ஏறெடுத்தும் பாராமல், இருந்து கதைத்து வீட்டுப் போங்கள் நாங்கள் அவசரமாகப் போகணும் என்று கூறிச் செல்லும் பண்பு எனக்குக் கிடையாது சித்திரா.'

'அண்ணா! நீங்கள் அதை மறக்கவில்லையா?'

'மறப்பதா! எப்படி? இத் தப் பதவி கிடைத்ததும் உனக்குச் சொல்லவேண்டும் என்று ஓடோடி வந்த பொழுது நீ செய்த மதிப்பை மறப்பதா?நான்எங்களோடு அன்பாகப் பழகிய அந்தப் பேதை சித்திராவைஇன்னும் மறக்கவில்லை. ஆனால் புது வாழ்வினுள் நுழைந்ததும் நன்றி இல்லாது தன்னையே மறந்து விட்டவளைப் பற்றி நினைப்பதே இல்லை.

'அண்ணா' என்று ஓடிச் சென்று அவனைத் தழுவிக் கொண்டு அவன் கால்டியில் விழுந்தாள் சித்திரா.

அதே சமயம் வெளியில் இன்னொரு குரல் 'அண்ணா வாசு அண்ணா' என்று ஒலித்தது.

(வளரும்)

---

## முன்னாள் கி. ச. தலைவர் மறைவு

புத்தூர் கி.ச.வின்முன்னாள் தலைவரும் தமிழரசுக் கட்சியின் தொடக்ககால உறுப்பினர்களில் ஒருவருமான திரு. சுப்பிரமணியம் ஜே.பி. 17.7.73ல் காலமானார். இவர் புத்தூர் கி.மு.சங்கம். ஐக்கிய பண்டகசாலை, ஆகியவற்றின் தலைவராகவும் புத்தூர் கி. ச. உறுப்பினராக 22 வருடகாலமும் பணியாற்றியுள்ளார். புத்த கலட்டி விஷ்ணு வித்தியாலயம் நிலைய காணி அன்பளிப்பு செய்தவரும் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4—வது வெற்றி வாரம்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா (வெள்ளவத்தை) லிடோ (யாழ் நகர்)

ஏ.வி. எம். ராஜன்
ரவிச்சந்திரன்
லட்சுமி
சாவித்திரி
சந்திரகலா
சோ (இரட்டை வேடம்)
மனோரமா
ஆனந்தன்



புகுந்த வீடு

206 வது தினம்

கெப்பிட்டல் (கொழும்பு) வெலிங்டன் (யாழ்நகர்)



சிவாஜி
கணேசன்
வாணிஸ்ரீ
நடித்த

(ஈஸ்ட்மென் கலர்)

வசந்த மாளிகை

கெயிட்டி

13ம் திகதி முதல்

● இது சத்தியம்

● நீர்க்குமிழி

x———x————x————x

வெகு விரைவில்

செல்லமகாலில்

இந்தியாவில் வெற்றி விழாவையும் தாண்டி ஓடிக்கொண்டிருக்கும்

K. பாலசந்தரின் நியூ வேவ் படம்

அரங்கேற்றம்

குடும்பத்துடன் சிரித்து மகிழவேண்டிய
புதுமைச் சித்திரம்

செல்லமகால்

கதை—வசனம்—டைரக்ஷன்

கோபு

காசேதான் கடவுளடா

கடைசி வாரம்



முத்துராமன்
M. R. R. வாசு
தேங்காய் சீனிவாசன்
ஸ்ரீகாந்த
மூர்த்தி
டைப்பிஸ்ட் கோபு
லட்சுமி
மனோரமா
ரமாபிரபா

இப்பொழுது காட்சியளிக்கிறது

ஈரோஸ் சென்ட்ரல் ராணி

பாமன்கடை கொழும்பு யாழ்ப்பாணம்

சிவாஜி, கே. ஆர். விஜயா, மனோரமா,
எம். ஆர். ஆர். வாசு, சோ, சகுந்தலா நடித்த



தமிழ்நாட்டில் 100 நாட்கள் ஓடிய

தவப் புதல்வன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயக்கா மாவத்தை 194ல், இலக்கத்தில் 1973ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 12-ம்திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.